Quite often we see that transparent tapes, brown paper strips available in the market have been used for repair of manuscripts which convert the paper to yellow or brown and burn them in course in time. We should never use pins to join papers as the iron pins becomes rusty after sometime. So it is necessary to choose right kind of materials. Torn manuscripts can be repaired by good quality of thin tissue paper with the help of starch paste or carboxy methyl cellulose.

The material for book-binding or for repair is usually gum or adhesive for fixing them. If strong adhesives are used for fixing those areas which are not fixed properly will tear first. This happens as the actual paper is weak and the adhesive is strong. It also changes the colour of the paper and attracts insects. Copper sulphate used as insecticide in the paste insect-proof damages paper. It is better to use home-made starch paste instead of cheap quality adhesive.

Light not only fades the colours of the illustrated manuscripts but also weakens the paper. Manuscripts should never be exposed to direct sunlight or high intensity light.

High temperature weakens the paper and makes it yellow. Manuscripts should therefore be always stored in cool and dry place.

Dust not only harms the manuscripts but also becomes the seat for moisture becoming dirt, which generates fungus. That is why protection from dust is very important. Storage area of manuscripts should be treated once in three months before the start of the new seasons. Slapping with a cluster a strictly prohibited for cleaning. First we should take out the books from the almyrahs and put them on a white paper on a table and clean out slowly by soft flat brush or cotton pad from inside to outside.

Termite, silverfish, cockroach, book beetle are very harmful enemies of manuscripts and paper collection. They damage the manuscripts

and destroy the whole collection. Their favourite food is gum or paste used for binding. To keep them safe, we use insecticides, like naphthalene balls by wrapping them in cotton cloth or bag and putting them by the side of the manuscripts or under them inside the shelves. Rats bite the rare manuscripts or books. Rat trap is beneficial but always change the place of rat trap. The bait which is kept inside the trap should be fresh, or else rats would not come near the trap. We should also close the holes near the window, door and small drainage by using cement and wire mesh.

Maintenance of Paper Manuscripts

Besides protection, proper maintenance of manuscripts is important. We should also take care of the collection by covering the manuscripts, if necessary. Old books may be read by keeping them on book rests.

Bundling old manuscripts on the floor or keeping them one over the other puts pressure on the paper. They also rub against each other so the paper gets weakened and breaks into pieces. We should wrap the manuscripts in cotton cloth. Colour should be red or yellow as was the belief of our fore-fathers.

Manuscripts which are not bound should be kept in between wooden boards. It is better to use good quality wood or hand made alkaline board. The alkaline boards will act as a buffer against the acidity. The board should be larger than the manuscripts so that the edges of the manuscripts are not damaged while handling or tying.

Care of Documents

Documents should be kept in hand-made thick alkaline board in a folder. These boards are easily available in India. Handmade boards are more durable and flexible than cheap quality boards.

Care of Storage

Proper storage is very important in the preservation of manuscripts and books. Manuscripts should not be kept in the open as this can cause great loss to manuscripts and also invite dust and dirt. Important manuscripts can be kept in specially prepared boxes. We should use good quality wood for almyrah. Cheap wood could be affected by insect much easily. So we should use insecticides / repellents for furniture before keeping the collection.

To safeguard these valuable manuscripts, documents and books, we should be cautious from the enemies of manuscripts and as mentioned earlier we should follow the control measures. In this way we can protect our rich heritage and culture.

Protection of Palm-leaf Manuscripts

1. When one receives or acquires a manuscript, it should not be kept immediately with other manuscripts, because if they are found to be infected by funge and insects, they will pass on the infection to the unaffected manuscripts. It may be cleaned by brushing gently and removing any insect larvae that may be noticed.
2. Wood powder falling out of holes in wooden boards indicates insect attack. The boards should be replaced and specialised treatment should be given.
3. Palm-leaves should not be tied in the centre only.
4. Keep leaves tightly pressed between boards by tying with a cord to apply even pressure.
5. Store the manuscript bundles neatly, if possible in closed racks, boxes or cupboards.
6. Wrap the manuscript in a thick cotton cloth.
7. Keep important manuscripts in small strong boxes which should be the first to be removed to a predetermined safe place in case of an emergency or disaster.
8. Handle the leaves gently when turning them over.
9. Do not mark or underline on the original leaf.
10. People in-charge of collections must document and publish the contents of the manuscripts. Instead of the original manuscript, copies or microfilms should be made available to the scholars for reference. Condition reports should be prepared.
11. Most of the damage takes place in storage. Regular inspection is a must and any damage should be immediately reported to the concerned authority who must take action to preserve the collection and its contents.
12. Responsibility should be placed on someone to look after the manuscripts.

How to Protect Manuscripts from Dust and Atmospheric Pollution?

1. Dust and atmosphere pollution should first of all be eliminated by not having the collection in a dusty or polluted area.
2. The building should be made dust free by planting grass and trees.
3. Important collections should be in the inner rooms.
4. The windows should be closed when possible.
5. An air curtain could be provided at the entrance.
6. A series of door mats should be placed along the way to the collection room. These mats should be cleaned regularly.
7. Manuscripts should be kept in closed showcases of boxes.
8. A distance should be maintained between the visitor and the object.
9. Room furniture should be cleaned with a damp cloth or vacuum cleaner.
10. Do not clean the manuscripts with a vacuum cleaner.
11. Sweep floors slowly with broom hugging the ground.
12. The air take in AC plants should be high up and should be in the least polluted side of the building e.g. the side not facing the traffic.
13. For eliminating sulphur dioxide and dust, fine water sprays can be used to wash the air before it is brought into the air conditioning system.
14. Manuscripts should be covered when not being used or viewed.

How to Protect Manuscripts from Light?

1. Light bulbs inside closed showcases heat and dry up the air causing the manuscript to become brittle and break easily.
2. Manuscripts should be displayed at a light intensity of not more than 40 lux. The Lux meter should be placed parallel to the displayed manuscript.
3. If the light intensity is higher than 40 lux, bring it down to 40 lux by switching off extra lights or by dimming them using a dimmer switch. Light intensity can also decreased by increasing the distance between the light source and the manuscripts on display.
4. Sunlight and tube light weakens the manuscript as the ultraviolet rays

damage the leaves. Block sunlight by closing windows or by putting curtains on windows or over objects.

5. Ultraviolet filters can be put over window panes and tube lights to cut off these harmful rays.
6. Zinc oxide or titanium oxide, which absorbs UV rays, should be used to paint the walls and ceilings and the light from fluorescent tubes can be reflected off them.
7. The manuscripts should be covered when they are not viewed by the visitors.
8. Lights should be switched off when there are no visitors seeing the manuscripts, or the manuscripts can be covered.

How to Protect from Insects?

1. Healthy manuscripts should be kept in closed boxes or cupboards.
2. Natural insect repellents like neem leaves can be placed along with the manuscripts.
3. Insects in the larva stage eat away the manuscripts. Newly acquired manuscripts may contain insect eggs and larvae which will infect the healthy collections. Therefore the infected manuscripts or newly acquired manuscripts should not be kept with the healthy manuscript collection.
4. It should be ensured that the covers of manuscripts are not insect attacked.
5. Food should not be brought near the collection storage and gallery to avoid pest attack.
6. The red cloth to be used to cover should be made acid free and starch free and this should be effected by thorough washing.
7. Regular inspection of the gallery and storage of the manuscripts should be made and if powder formation is noticed, it should be immediately reported to the authorities for rectification.
8. The infested manuscripts should be removed from collection and treated separately.
9. If a fumigation chamber is available with appropriate chemicals the insect infestation may be removed with the help of a trained staff in this.

10. Papers treated with insecticides may be kept in the collection.
11. The windows should be closed during nights. In order to avoid insects and avoid other vandalism, a mesh or net may be fixed to the windows.
12. The premises should be kept clean.
13. If a new building is to be constructed for storing or displaying manuscripts, it should be treated for anti-termite attack. Old buildings should be treated for termites once a year.
14. The collection cupboards should be away from the walls and the contact points such as the legs of the cupboards should be treated with insecticides.

Protection from Temperature and Relative Humidity

1. Temperature and relative bumidity should be constant as much as possible by keeping the manuscripts wrapped in de-starched cotton cloth in an inner room and moisture absorbing materials such as cotton curtains, wooden furniture etc., should be around the collections. These buffer materials absorb and release moisture slowly thus decreasing the harmful effects of fluctuations.
2. If air-conditioners are used, it should be 24 hours and 365 days a year. It is better to have been undisturbed rather than air-conditioning only during office hours.
3. If manuscripts have paintings on them, the leaves should be intervened with tissue paper to avoid abrasion and also to act as a buffer.
4. The temperature and relative humidity should be recorded for future assessment purposes so that corrective steps may be taken at the appropriate times in the future.
5. Movement of visitors should be regulated. Too much crowd may not be allowed at a time.
6. No pipe lines, wash basin, toilets or water accumulation should be allowed.
7. Silica gel with self indicator may used to control relative humidity. Fluctuations in the relative humidity will break or make the manuscripts got wrinkled.
8. There should be air circulation to avoid fungal growth in the collection.

9. Exhaust fans may be used to exhaust damp air from the room.

10. Wet manuscripts should never be dried under sun but under shade.

Storage and Display of Manuscripts

1. Storage area should be well ventilated, lighted and clean.
2. The manuscripts should be neatly stacked in boxes.
3. The lowest storage shelf of the stack should be at least 9 inches above from the floor level.
4. There should be space between the wall and the stacks to avoid moisture transfer from the wall and to avoid insect attack.
5. Manuscripts should be aired regularly while inspecting them.
6. The manuscripts should be well documented for their easy retrieval.
7. Electricity controls, fuse boxes etc., should be installed outside the room.
8. Inflammable materials like paints, chemicals etc., should be kept outside the storage room.
9. Open fire and smoking should be strictly prohibited inside the storage.
10. Displayed manuscripts should be well supported on a flat storage.
11. Light, relative humidity, dust, temperature should be controlled in the storage.
12. The manuscripts should be changed with other manuscripts to avoid fading.

Workshop for Trainers

The National Mission for Manuscripts, New Delhi in collaboration with the National Museum, New Delhi conducted a workshop for Training the Trainers on Preventive Conservation of Manuscripts from 23rd to 28th August 2004 at the National Museum, New Delhi for the northern States. A similar workshop was conducted by the National Mission for Manuscripts, New Delhi in collaboration with the Government Museum, Chennai from 6th to 11th September 2004. Dr. Sudha Gopalakrishanan was the Mission Director. Mr. M.A. Siddique, I.A.S., Administrative Director of the Workshop conducted this in Chennai. Dr. J.Raja Mohamad was the Technical Director. Dr. V.Jeyaraj was the Workshop Leader and

Mr. R.Balasubramanian was the Facilities Leader. Twenty participants from Andhra Pradesh (5), Karnataka (4), Kerala (2) and Tamilnadu (9) participated in the programme. Experts from all over India handled both the theory and practical classes. Participants were taught how to teach preventive conservation to the collection in-charge of the manuscripts. They were taken to Tamilnadu Archives, Oriental Manuscripts Library and museums. They were trained to organize programmes on preventive conservation.

Conclusion

Prevention is better than cure. Therefore, it is always better to carry out preventive measures to safeguard the manuscripts. Let us preserve the manuscripts under out custody so that they may be preserved for posterity.

Bibliography

1. Anupam Sah (2001) Save Palm-leaf Manuscript Heritage, INTACH, Indian Council of Conservation Institutes, Lucknow.
2. Jeyaraj V., (2000) Care of Archival Materials, Published by the Saraswati Mahal Library, Thanjayur.
3. Mamta Misra (2001) Save Paper Manuscripts, INTACH, Indian Council of Conservation Institutes, Lucknow.

**Curator, Chemical Conservation and Research Laboratory, Government Museum, Chennai - 600 008.*

கர்நாடக மாநிலத்தில் பண்டிப்பூர் தேசியப் பூங்காவில் காணலாகும் அரிய நடுகல் சிற்பங்கள்

முனைவர் சி. மகேசுவரன்*

முன்னுரை

தமிழ்நாடு, கர்நாடகம், கேரளம் ஆகிய மூன்று அண்டை மாநிலங்களின் முக்கூடலான நீலகரி உயிரிக்கோளம் காப்பகத்தின் ஒரு பகுதியாக விளங்கும் பன்டிப்பூர் தேசியப் பூங்கா கர்நாடக மாநிலத்தின் சாம்ராஜ நகர் மாவட்டத்தில் பண்டிப்பூர் எனும் சிற்றுரை ஒட்டிய வனப் பரப்பில் அமைந்துள்ளது. புலிகள் காப்புத் திட்டத்தின் செயலகமாகவும் இது விளங்குகிறது.

இத் தேசியப் பூங்காப் பரப்பின் வனப் பகுதியிலிருந்து 17 கற்சிற்பங்களும் ஒரு கல்வெட்டு கர்நாடக மாநில வனத் துறையினரால் கொணரப்பட்டு மேற்படி தேசியப் பூங்காவின் முகப்பில் திறந்தவெளிக் காட்சிபொருட்களாக நிலை நிறுத்தப்பட்டுப் பேணப்பட்டுள்ளன. நடுகல் சிற்பங்கள் எனப்படும் வீரக் கற்கள் கற்சிற்பங்களுள் பெரும்பாலானவை முப்பரிமாணமாகவும் அரைப் புடைப்பாகவும் அமைந்துள்ளன. எஞ்சியுள்ளவை நாட்டுப்புறவியல் தெய்வங்களின் அரைப் புடைப்பு உருவங்கள். ஒற்றைக் கல்வெட்டு தமிழில் அமைந்துள்ள அரியதொரு கல்வெட்டு[1]. இவற்றுள் பெரும்பான்மைக் கற்சிற்பங்களாக விளங்கிடும் நடுகல் சிற்பங்களுள் நான்கு வீரக் கற்கள் அரிய வடிவில் முப்பரிமாணமாக அமைந்துள்ளன. இவ்வரிய வகை நடுகல் சிற்பங்களை அறிமுகப்படுத்துவதே இக் கட்டுரையின் நோக்கம்.

பண்டிப்பூர் தேசியப் பூங்காவின் அரிய வகை முப்பரிமாண நடுகல் சிற்பங்களின் உருவ அமைதி

மேலே கட்டப்பட்ட அரிய வகை முப்பரிமாண நடுகல் சிற்பங்கள் நான்கும் அளவில் ஒன்றையொன்று வேறுபட்டுக் காணப்பட்டாலும் உருவ அமைதியைப் பொறுத்த வரையில் தமக்குள் வேறுபாடு ஏதுமின்றி ஒன்று போல அமைந்துள்ளன. இருப்பினும், இவை அனைத்துமே இதுவரை கண்டறியப்பட்டுள்ள

நடுகல் சிற்பங்களை ஒப்பு நோக்க அரியதொரு புது வகையினவாக இலங்குகின்றன[2].

நின்ற கோலத்தில் வீரத் திருமகனாகத் திகழ்ந்திடும் நடுகல் வீரன் உருவங்கள் நான்கும், இயல்பிற்கு மாறாக, நான்கு கைகளுடன் அதாவது, கூடுதல் ஓரிணைக் கைகளுடன் காட்டப்பட்டுள்ளன. முதலிருக் கைகளுள் வலக்கை சற்று மடிந்து, இடுப்பின் குறுவாளைப் பிடித்தவாறும் கீழ்நோக்கித் தளர்ந்த இடக் கையின் உள்ளங்கை தண்டத்தின்மீது படிந்தவாறும் அமைக்கப்பட்டுள்ளன. மேலே உயர்த்திக் காட்டப்பட்டுள்ள கூடுதல் இணைக் கைகளுள் வலக்கையின் உயர்த்திய சுட்டு விரல்மீது சொட்டை எனப்படும் படைக்கலமும் இடக் கையில் வில்லும் காட்டப்பட்டுள்ளன. ஒரே திசை நோக்கி நடைபோடுவது போலக் காட்டப்பட்டுள்ள கால்கள் மீது வீரக் கழலும் கீழே பாதக் குறடும் காணலாகின்றன. வலப் பக்கமாகச் சரிந்த கொண்டையும் முகத்தில் மேலுயர்ந்த முறுக்கு மீசையும் காதில் மகர குண்டலமும் அழகுற அமைந்துள்ளன. தலைமேல் வெண்கொற்றக் குடை காட்டப்பட்டுள்ளது.

நடுகல் வீரரைச் கற்றிலும் காட்டப்பட்டுள்ள குதிரை இலாட வடிவ அலங்காரச் கற்று வளைவானது சிற்பத்திற்கு அழகூட்டுவதாக அமைவதுடன் ஒரு சில சிற்பக் கூறுகளைக் காட்டிட உதவும் வகையிலும் அமைந்துள்ளது. சான்றாக அலங்காரச் கற்று வளைவு வலப்புறத்தின் கீழே சாமரம் வீசிடும் பணிப்பெண் உருவமும் சிற்பத்தின் பீடம் போன்று அமைந்திடும் கீழ்ப் புறத்தில் நடுகல் வீரன் பங்கேற்ற போர்க் களக் காட்சியும் புடைப்புச் சிற்பங்களாகக் காட்டப்பட்டுள்ளவற்றைக் குறிப்பிடலாம்.

பண்டிப்பூர் தேசியப் பூங்காவின் அரிய வகை நடுகல் சிற்பங்களின் உருவ அமைதிவாயிலாகப் பெறப்படும் முடிவுகள்

மேலே குறித்துள்ள அரிய வகையினவான நடுகல் சிற்பங்களின் உருவ அமைதி கீழ்க் காணும் முடிவுகளுக்கு நம்மை இட்டுச் செல்கின்றது :

1. நடுகல் வீரரது படைக்கலக் கருவியாகக் காட்டப்பட்டுள்ள

சொட்டை வேட்டுவரது இனக்குழுப் படைக்கலமாகும். எனவே, இந்நடுகல் வீரர் வேட்டுவ இனக்குழுவினர் என்பது பெறப்படுகிறது[3].

2. இந்நடுகல் வீரர்க்கு வெண்கொற்றக் குடையும் சாமரம் வீசிடும் பணிப் பெண்ணும் காட்டப்பட்டுள்ளதால் இந்நடுகல் வீரர் படைவீரர் அல்ல தலைமாந்தரே என்பதும் பெறப்படுகிறது[3].

3. தாம் சார்ந்த சமுதாயத்தின் நிலை பாட்டிற்கெனத் தம் இன்னுயிரை ஈந்த நடுகல் வீரரைத் தெய்வமாகக் கருதி வணங்குதல் 'பட்டோரைப் பரவுதல்' என அறியலாகிறது. இருப்பினும், இந்நடுகல் சிற்பங்களில் கூடுதல் ஓரிணை கைகளைக் காட்டியுள்ளதன் வாயிலாக நடுகல் வீரர் தெய்வ நிலைக்கே உயர்த்தப்பட்டுள்ளமை வெளிப்படையாகவே காட்டப்பட்டுள்ளது என்பது மேலும் பெறப்படுகிறது.

திறந்தவெளியில் காட்சிப்படுத்தியதால் பண்டிப்பூர் தேசியப் பூங்காவின் தொன்மரபுச் சின்னங்களுக்கு நேரிடும் சீர்குலைவும் காப்பு நடவடிக்கைகளுக்கான கருத்துரைகளும் :

பண்டிப்பூர் தேசியப் பூங்காவின் முகப்பின்கண் திறந்தவெளிக் காட்சிப்படுத்தத்தில் அமைக்கப்பட்டுள்ள மேற்படி அரிய வகை நடுகல் சிற்பங்கள், பிற கல் சிற்பங்கள், தமிழ்க் கல்வெட்டு உள்ளிட்ட அனைத்துத் தொன்மரபுச் சின்னங்களும் வனச் சூழலில்மழையினால் கல் பாசிகள் படர்ந்து சீர்குலைவிற்கு உள்ளாகின்றன. மழைக் காலத்தில் நிலவிடும் அதிக ஈரப் பதத்தால் உருவாகும் கல் பாசிகள் மேற்படித் தொன்மரபுச் சின்னங்கள்மீது படர்ந்து, அவற்றின் தோற்றப் பொலிவில் தொய்வை ஏற்படுத்துவதுடன் தாம் வெளிப்படுத்தும் துணைநிலை வளர்சிதை மாற்ற வேதியியல் பொருள்களின் அமிலத் தன்மையால் உயிரியல் சிதைவினை விரைவுபடுத்துகின்றன. அதாவது, அரும்பொருட்களின் கல் பரப்பு மீது ஏற்படும் இத்தகைய அமிலத் தன்மையின் தொடர்ந்த தொகுப்பு, வளி மண்டலத்திலுள்ள வேதியியப் பொருட்களுடன் வினைபுரிந்து உப்புகளை உருவாக்குகின்றன. இதனால், காலப் போக்கில் இவ் வரும் பொருட்களின் பரப்பு மீது முதலில் சிதைவும் அதனைத் தொடர்ந்து சீர்குலைவும் ஏற்படுகின்றன.

தமது இருப்பிலுள்ள விலை மதிப்புமிக்க கலை, வரலாற்று, பண்பாட்டுத் தொன்மரபுச் செல்வங்களான இவற்றை அழிவினின்று மீட்டிடவும் மேலும் அழிந்திடாமல் காத்திடவும் பண்டிப்பூர் தேசியப் பூங்காவின் வனத்துறையினர் கீழ்க் குறித்த காப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டால் விரும்பத் தகுந்த விளைவுகளை ஏற்படுத்தலாம் :

i) முதலில், தக்க பயிரியல் வல்லுநரைக் கொண்டு அரும்பொருள்களின் கல் பரப்பு மீது படரும் கல் பாசி வகைகளை இனங்கண்டறிந்து வகைபாடு செய்திட வேண்டும்.

ii) பின், கல் பாசி வகைகளுக்குத் தக்க வேதியியப் பொருட்களைப் பயன்படுத்தி, முற்றாகக் கல் பாசிப் படர்வுகளை நீக்கிட உற்ற வேதியியப் பாதுகாப்பாளரையும் துணை கொள்ள வேண்டும்.

iii) முடிவாக, அரும்பொருட்களின் கல் பரப்புமீது தக்க காப்பு வேதியியல் பொருள்களைப் பூசி, அவை மேலும் சீர்குலைவு அடையாதவாறு உறுதிப்படுத்திட வேண்டும்.

முடிவுரை

கர்நாடக மாநிலப் பண்டிப்பூர் தேசியப் பூங்காவில் திறந்தவெளியில் காட்சிப்படுத்தி அமைக்கப்பட்டுள்ள இந் நடுகல் சிற்பங்கள் நான்கும் நடுகல் வீரர் தெய்வ நிலைக்கு உயர்த்தப்பட்டுத் தெய்வமாகவே வணங்கப்பட்டதுடன் சிற்ப உருவ அமைதியில் தெய்வமாகவே வெளிப்படையாகக் காட்டப்பட்டுள்ள அரிய வடிவினவாகும். இந்தியப் படிமவரைவியலில் அதிலும் குறிப்பாகத் தென்னிந்தியப் படிமவரைவியலில் இவை புது வரவுகள் மட்டுமல்லாது போற்றத் தகுந்த வரவுகளாகவும் அமைகின்றன. மேலும், இத்தகைய அரிய வடிவினவான இவ்வரிய நடுகல் சிற்பங்களை அழிவினின்று காப்பது நம் கடமையும் ஆகும்[5].

அடிக் குறிப்புகள்

1. இக்கல்வெட்டு குறித்த விரிவான தகவல்களுக்குக் காண்க : மகேசுவரன், சி 2002 கருநாடகக் காட்டிலிருந்து கிடைத்திட்ட ஓர் அரிய தமிழ்க் கல்வெட்டு அருங்காட்சியக மலர் - 9 சென்னை அரசு அருங்காட்சியகம்.

2. இதே போன்றதொரு வீரக்கல், ஈரோடு கலைமகள் கல்வி நிலையத்தின் "தொல்பொருள் கூடத்திலும்" திறந்தவெளிக் காட்சிப் பொருளாகக் காட்சிப் படுத்தப் பட்டுள்ளது குறிக்கத்தக்க செய்தியாகும்.

3. தீரன் சின்னமலையின் படைவீரர் குழுக்களுள் ஒன்று இச் சொட்டை எனும் போர்க்கருவியைச் சொட்டை முறி எனத் திறம்படக் கையாளும் திறன் படைத்ததாகத் தீரன் சின்னமலை வாழ்க்கை வரலாற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது இக்கருத்திற்கு முரணாக அமைகிறது என்பதை இங்குக் குறிப்பிடாமல் இருக்கவியலவில்லை.

4. ஈரோடு மாவட்டம்; சத்தியமங்கலம் வட்டம், கெம்பநாயக்கன்பாளையத்திற்கு அருகிலுள்ள கடம்பூர் வனச் சரக எல்லைக்கு உள்பட்ட மலைப் பகுதியிலுள்ள மல்லியம்மன் துர்க்கம் எனும் மலையாளிப் பழங்குடியினரது சிற்றூரின் கண் . கண்டுபிடிக்கப் பட்டு இனங் கண்டறியப்பட்ட மூன்றடுக்கு வீரக் கல்லின் கீழ் அடுக்கில் காட்டப் பட்டுள்ள போரிடும் வீரர் இருவருக்குமே வெண் கொற்றக் குடையானது பணியாளருடன் காட்டப்பட்டு, அவ்விருவருமே குறுநில மன்னர் அல்லது மன்னர் என உணர்த்தி நிற்பதை இங்கு ஒப்பு நோக்கலாம்.

5. பண்டிப்பூர் தேசியப் பூங்காவின் திறந்தவெளியில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அரும்பொருள்களில் காணலாகும் நுண்ணுயிரிச் சீர்குலைவுகள் குறித்த விரிவான தகவல்களுக்குக் காண்க.

Maheswaran, C 2002, "Microbial Deteriogens on the sculptures at the Bandipur National Part" 143-145, In Special Volume on Conservation of Stone Objects [Ed. by Dr. V. Jeyaraj] Government Museum, Chennai.

நோக்கீட்டு ஏடுகள்

மகேஸ்வரன், சி (2002) கருநாடகக் காட்டிலிருந்து கிடைத்திட்ட ஓர் அரிய தமிழ்க் கல்வெட்டு அருங்காட்சியக மலர் 9 அரசு அருங்காட்சியகம், சென்னை.

Maheswaran, C 2002, "Microbial Deteriogens on the sculptures at the Bandipur National Part" 143-145, In Special Volume on Conservation of Stone Objects [Ed. by Dr. V. Jeyaraj] Government Museum, Chennai.

நன்றியுரை

பண்டிப்பூர் தேசியப் பூங்காவின் திறந்தவெளியில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அனைத்து அரும்பொருட்களையும் ஆராய்ந்திடவும் ஒளிவட்ட ஆவணமாக்கம் செய்திடவும் உதவிய கோயம்புத்தூர் ஆனைக்கட்டியில் அமைந்துள்ள சலீம் அலி பறவையியல் மற்றும் இயற்கை வரலாற்று நடுவத்தின் இளநிலை ஆராய்ச்சியாளர், திருமிகு. மா. குணசேகரன் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றி இங்கு படைக்கப்படுகிறது.

*காப்பாட்சியர், அரசு அருங்காட்சியகம்,
ஈரோடு - 632 002.

கொங்கு நாட்டில் காணலாகும் வாதப் பி.ள்ளையார் வழிபாடு எனும் சந்தி வழிபாடு

முனைவர் சி. மகேசுவரன்*

முன்னுரை

கோயம்புத்தூர் சத்தியமங்கலம் பெருவழியில் கோயம்புத்தூரிலிருந்து 16 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள கோவில்பாளையம் என்கிற சர்க்கார் சாமக்குளம் வரலாற்று சிறப்புடையது. கலையம்புத்தூர், கலசையம்பதி, கலசை, சாம்பல் குளம் எனப் பல பெயரிலான மிகத் தொன்மையான இவ்வூரின் முகப்பில் அருள்மிகு காலகாலேசுரர் திருக்கோவிலும் வட எல்லையில் அருள்மிகு கலைய காளியம்மன் திருக்கோயிலும் மேற்படிக் கலைய காளியம்மன் கோயிலின் வட எல்லையில் அருள்மிகு கூப்பிடு பிள்ளையார் திருக்கோயிலும் மேற்படி எல்லையின் முச்சந்தித் திறந்த வெளியில் அருள்மிகு வாதப் பிள்ளையார் திருக்கோயிலும் அமைந்துள்ளன.

கோவில்பாளையம் பகுதியைச் சுற்றியுள்ள பகுதிகளிலுள்ள மக்களுள் மூட்டு வாதத்தால் அவதியுறும் ஆண், பெண் இரு பாலரும் இவ்வாதப் பிள்ளையார் கோயிலில் ஒரு குறிப்பிட்ட வழிபாட்டு முறையைக் கடைப்பிடிப்பதனால் தமது வாத நோயிலிருந்து விடுபடுவதாக நம்புகின்றனர். கொங்கு நாட்டின் 24 நாடுகளுள் ஒன்றான ஆறை நாட்டில் கோவில்பாளையத்தையும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளையும் உள்ளடக்கிய கலைய நாடு பகுதியில் காணலாகும் வாதப் பிள்ளையார் வழிபாடு குறித்து விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கம்.

வாதப் பிள்ளையார் வழிபாடு ஓர் அறிமுகம்

கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் வட்டம், கோவில்பாளையம் ஊரிலுள்ள வாதப் பிள்ளையார் திருக்கோயிலான முச்சந்தித் திறந்தவெளியில் உருவம் ஏதுமற்ற (அருவ வடிவக்) கருங்கல் ஒன்று நிலை நிறுத்தப்பட்டுள்ளது. இக்கல்லின் மீது சூல வடிவம் அரைப் புடைப்பாகச் செதுக்கப்பட்டுள்ளது[1]. இதுவே வாதப் பிள்ளையார் எனக் குறிப்பிடப்படுகிறது. இதன் எதிரே வார்ப்பு இரும்பாலான சூலம்,

வேல், ஓசை மணிகள் பொருத்தபபட்ட வேல் உள்ளிட்டவை நிறுத்தப்பட்டுள்ளன. இதன் கீழ், சிறு குழி ஒன்று தரையில் காணப்படுகிறது. வாத நோயுற்ற ஊரார் தாம் கையோடு கொணர்ந்து நூல் கண்டு முடியும் வரை இவ்வாதப் பிள்ளையார் கல்லையும் எதிரே நிறுத்தப்பட்டுள்ள சூலம், வேல்கள் உள்ளிட்டவற்றையும் சேர்த்துச் சுற்றுகின்றனர். நூல் கண்டில் நூல் முடிவுற்ற பின் (ஆணாயினும் பெண்ணாயினும்) வாத நோயுற்றவர் தமது உடைகளை முழுவதும் களைந்து விட்டுப் பிறந்த கோலத்தில் மேற்படி வாதப் பிள்ளையார்க் கல்லை வலம், இடமாக மும்முறை கற்றி வருகின்றனர். பின்னர், இவ் வாதப் பிள்ளையார் கல் மீது தாம் கையோடு கொணர்ந்து நல்லெண்ணெயை முழுக்காட்டி, அக்கல்லிலிருந்து வழியும் எண்ணெய்யை வழித்தெடுத்துக் கொண்டு, அந்த எண்ணெயால் தமது வாத நோய் நீங்குமாறு தம் உடல்மீது பூசிக்கொள்கின்றனர்.

இவ்வாறு, வாதப் பிள்ளையாரை வாரத்தில் செவ்வாய், வியாழன், ஞாயிறு என மூன்று நாட்கள் அதிகாலை 3 மணி முதல் 6 மணிக்குள் வழிபடுகின்றனர். தொடர்ந்து இம் மூன்று நாட்களில் இவ்வாறு வாத நோயாளியர் வந்து இவ் வாதப் பிள்ளையார் வழிபாட்டில் ஈடுபடுகின்றனர். மூன்றாம் முறை வாதப் பிள்ளையார்க்கு வழிபாடு நிறைவுற்ற உடனேயே அவ்வாறு வழிபாடு செய்த வாத நோயாளியரின் எத்தகைய வாத நோயும் நீங்கி விடுவதாகக் கூறப்படுகிறது. பின்னர், இவ்வாறு வாத நோய் நீங்கப்பெற்றோர் வாதப் பிள்ளையார்க்குத் தமது நேர்த்திக் கடனாகக் கோழியைப் பலியிட்டுப் பொங்கலுமிட்டுத் தமது நன்றி தெரிவிக்கும் சடங்கினை நிறைவேற்றுகின்றனர்[3].

வாதப் பிள்ளையார் குறித்த தொன்மைக் கதை

வாதப் பிள்ளையாரை அருகிலுள்ள கலைய காளியம்மன் மற்றும் கூப்பிடு பிள்ளையாருடன் இணைத்துக் கூறப்படும் தொன்மைக் கதையானது கோவில்பாளையம் பகுதி மக்களிடையே வழக்கிலுள்ளது. செவிவழிச் செய்தியாகச் சொல்லப்படும் இத் தொன்மைக் கதையில் நாட்டுப்புற வழக்காற்றியலுக்குரிய பொதுப் பண்பான பாட வேறுபாடுகளுக்கும் இடமுள்ளது. இத் தொன்மைக் கதை பின் வருமாறு :

திருடர கூட்டமென்று கலைய காளியமமன் திருக்கோயிலினுள் நுழைந்து இறைவியின் அணிகலன்களைத் திருட முனைகிறது

அம் முயற்சியை அருகிலுள்ள பிள்ளையார் குரலெடுத்து ஊராரைக் கூப்பிட்டுத் தெரிவித்து விடுகிறார்[3].

பிள்ளையாரால் கூப்பிடப்பட்ட ஊர் மக்கள் கலைய காளியம்மன் கோயில் வளாகத்திற்குள் வந்து பார்க்கும் போது கொள்ளையடிக்க வந்த திருடருள் நால்வர்[4] தம் கண்கள் குருடாகிக் கலங்கித் தவித்திட [5], எஞ்சியோர் ஊருக்கு வெளியே அஞ்சி ஓடுகின்றனர். அத் திருடருள் ஒருவன் தான் இறக்கும் தருவாயில், எனது வாதம் நீக்கும் வல்லமையால் மக்களுக்கு அருள் புரிவேன் எனக் கூறிக் கல்லாக மாறி விடுகிறான[6].

வாதப் பிள்ளையார் வழிபாட்டு மரபினூடே காணலாகும் விடை காணவியலாச் சில வரலாற்றுப் புதிர்கள்

வாதப் பிள்ளையார் வழிபாட்டு மரபினூடே காணலாகும் சில வரலாற்றுப் புதிர்களுக்கு இன்று வரை விடை காணப்பட இயலவில்லை. அவை பின்வருமாறு :

கலைய காளியம்மன் திருக்கோயில் வளாகத்தின் உள் சுற்றுப் பிரகாரத்தில் அமைந்துள்ள நவகண்டச் சிற்பங்கள் (எனும் தலைப் பலிச் சிற்பங்கள்)[7] மூன்றும் கலைய காளியம்மன் அணிகலன்களைக் கொள்ளையிட வந்து கல்லாகிப் போன திருடர் எனக் குறிப்பிடப்படுதல்[8].

வாதப் பிள்ளையார் எனக் குறிப்பிடப்படும் உருவமற்ற கல்லைப் பிறந்த மேனியராகச் சுற்றிவரும் வாத நோயாளிகள் தமது கால் முட்டிகள் இரண்டும் அக்கல்லின் மீது படுமாறு வணங்குதல்[9].

கூப்பிடு பிள்ளையார் சிற்பம் நிறுவப்பட்டுள்ள அதே மேடையில் அப் பிள்ளையார் சிலைக்கு இடப் புறமாகச் சமணத் தீர்த்தங்கார் கற்சிற்பமொன்று நிறுவப்பட்டுப் புத்தர் என ஒரு சேர ஊர் மக்களால் வணங்கிப்படுதல்

மற்றும்

காலகாலேசுவரர் திருக்கோயில் வெளிச் சுற்றுப் பிரகாரத்திலுள்ள

பல உதிரிக் கற்சிற்பங்களுள் ஒன்று சமண தீர்த்தங்கரர் உருவமாக விளங்குதல்.

முடிவுரை

நூல் கண்டின் நூலினைக் கொண்டு ஆற்றல் பரப்பினைக் குறிப்பிட்ட எல்லைக்குள் உள்ளடக்குதல், பிறந்த மேனியராக வாதப் பிள்ளையார்க் கல்லினைச் சுற்றி வருதல், நேர்ச்சைப் படையலாகக் கோழியை உயிர்ப் பலி கொடுத்தல் உள்ளிட்ட நாட்டுப்புற இயல்மரபு[10] வழிபாட்டுக் கூறுகளிலிருந்து, கொங்கு நாட்டில் வழக்கிலுள்ள வாதப் பிள்ளையார் வழிபாடு என்பது நாட்டுப்புற இயல்மரபு சார்ந்ததொரு வழிபாட்டு நெறியே என உறுதியிட்டுக் கூறலாம்.

சிவன் கோயிலுக்குக் கொடையாக நிலம் அளிக்கப்பட்டதைக் குறிக்க நடப்படும் சூலக் கல் எனப்படும் சூலம் அரைப் புடைப்பாகப் பொறிக்கப்பட்ட அடையாளக் கல்லானது வாதப் பிள்ளையாராகக் கருதி வழிபடப்படுகிறது என்பதனால் நாட்டுப்புற இயல்மரபு வழிபாட்டு நெறி இங்கு ஒரு வகையான மேல்நிலையாக்கம் பெற்றுள்ளது என்றும் துணிந்து முடிவிற்கு வரலாம்.

நாட்டுப்புற இயல்மரபு சார்ந்து வெளிகளில் அமைந்திருக்கும் தலைப்பலிக் கற்சிற்பங்கள், கூப்பிடு பிள்ளையார், கலைய காளியம்மன் உள்ளிட்ட பல்வேறு காலங்களைச் சார்ந்து கூறுகளை நாட்டுப்புறத் தொன்மைக் கதைக்குள் கொணர்ந்து, ஒரே காலம் சார்ந்த கதைக் கூறுகளாகப் புனையும் கதை கூறும் மரபும் நாட்டுப்புற வழக்காற்றியலில் காணக்கூடியதே என்பதும் கொங்கு நாட்டு வாதப் பிள்ளையார் வழிபாடு வாயிலாக வெளிப்படக் காணலாம்.

இறுதியாக முச்சந்தி மற்றும் நாற்சந்திகளில் காணலாகும் இயல்மரபுத் தெய்வங்களுக்கு ஆற்றல் மிகுதி எனும் நாட்டுப்புற நம்பிக்கையின்பாற்பட்ட சந்தி வழிபாடே இவ்வாதப் பிள்ளையார் வழிபாடு என உறுதிபடக் கூறலாம்.

தகவலாளிகள் விவரம்

வரிசை எண்	தகவலாரி பெயர்	சாதிப்பிரிவு	அகவை	இருப்பிடம்	களப்பளி நாள்
1.	திரு. பகவதி சிவதாசன்	குருக்கள்	45	கோவில்பாளையம்	25-04-2000
2.	திரு. காளியண்ணன்	கொங்குவேளாளர்	52	கோவில்பாளையம்	25-04-2000
3.	திரு. ரங்கநாதன்	கொங்குவேளாளர்	53	கோவில்பாளையம்	25-04-2000
4.	திருமதி. செல்வமணி	கவரா நாயுடு	38	கோவில்பாளையம்	25-4-2000

அடிக் குறிப்புகள்

1. சைவ சமயத் திருக்கோவிலுக்குக் கொடையாக அளிக்கப்பட்ட நிலத்தைக் குறிக்க நடப்படும் அடையாளக் கல்லே சூலக் கல் ஆகும்.
2. போக்குவரத்து வசதியற்ற அந்நாளில் வாதப் பிள்ளையார் வழிபாட்டிற்கென வரும் வெளியூரினர் முதல் நாள் மாலையே முன்னதாக வந்து, கலைய காளியம்மன் கோவில் வளாகத்தில் தங்கியிருந்து, மறுநாள் அதிகாலை குளித்து, மாற்றுடை உடுத்து, வாதப் பிள்ளையார் கோயிலுக்குச் சென்று தமது வழிபாட்டினை மேற்கொள்வதை வழக்கமாகக் கொண்டிருந்தனர் என்று கூறப்படுகிறது.
3. இதனாலேயே, கூப்பிடு பிள்ளையார் எனப் பின்னர் அப் பிள்ளையார் அழைக்கப்பட்டார் எனப்படுகிறது.
4. மூவர் எனவும் பாட வேறுபாடு உண்டு.
5. கலைய காளியம்மன் சாபத்தால் கல்லாக மாறினர் எனவும் பாட வேறுபாடு சொல்லப்படுகிறது.
6. கலைய காளியம்மன் அத் திருடனைக் கல்லாகப் போகுமாறு சபித்ததாகவும் பாட வேறுபாடு உள்ளது.
7. சாவான் பலிக்கல் அல்லது சாவாராப் பலிக் கல் என்கிற மாற்றுச் சொல்லாட்சியும் இதற்கு உண்டு.
8. ஏனெனில் தாம் சார்ந்த சமுதாயத்திற்காகத் தம் தலையையே கொற்றவைக்கு அரிந்து கொடுத்துத் தன்னுயிர் மாய்த்தலில் தம்மை ஈடுபடுத்திக் கொண்ட நிழல் படையினரான கைக்கோளர் திருடராகக் குறிக்கப்படுதல் ஐயமின்றி முரண்பாடே.

9. இத்தகைய வழிபடு நிலை வளமை வழிபாட்டினைக் குறிப்பதாகலாம்.

10. மில்டன் சிங்கர் எனும் மேனாட்டவரால் பெரு (நெறி) மரபு என அயல் மரபான சமத்கிருத மரபும் சிறு (நெறி) மரபு என இயல் மரபான மண்ணின் மைந்தர் மரபும் தவறாகக் குறிக்கப்பட்டதை உணர்ந்து இக்கட்டுரை ஆசிரியரால் இவ்விரண்டு சொல்லாட்சிகளுக்கும் முறையே அயல் மரபு இயல் மரபு எனும் பொருத்தமான மாற்றுச் சொல்லாட்சிகள் புழக்கத்திற்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ள (விரிவான தகவல்களுக்குக் காண்க : மகேசுவரன், சி 2003 இயல் மரபினின்று பிரித்தறிதலில் நாட்டுப்புறவியலின் பங்களிப்பு தன்னனானே.

நோக்கீட்டு ஏடுகள்

சௌந்தரபாண்டியன், சு. (பதிப்பர்) (1995) "சாமக்குளம் மார்க்கண்ட பண்டிதர் ஒழுங்கு கைபீது தமிழக ஊர் வரலாறுகள் சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், சென்னை

சௌந்தரபாண்டியன், சு. (பதிப்பர்) (1977) கொங்கு மண்டல வரலாறுகள், அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், சென்னை.

மகேசுவரன், சி. (2003) இயல் மரபினை அயல் மரபினின்று பிரித்தறிதலில் நாட்டுப்புறவியலின் பங்களிப்பு தன்னனானே

நன்றியுரை

அருள்மிகு கலைய காளியம்மன் திருக்கோவில் குடமுழுக்குப் பெருவிழாவினை ஒட்டி வெளியிடப்படும் மலர்க்கென வாதப் பிள்ளையார் வழிபாடு குறித்து ஆராய்ச்சிக் கட்டுரையொன்றினை நல்குமாறு கோரி, இவ் ஆராய்ச்சிப் பரப்பில் என்னை ஈடுபடச் செய்த கோயம்புத்தூர் கொங்கு நாடு கலை, அறிவியல் கல்லூரித் தமிழ்த் துறையின் மேனாள் தலைவரும் பேராசிரியருமான முனைவர் தெ. கலியாணசுந்தரம் அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றி இங்குப் படைக்கப்படுகிறது.

*காப்பாட்சியர், அரசு அருங்காட்சியகம்,
ஈரோடு 638 001

கலைக்கருவூலம் கரூர்

ப. இராசமோகன்*

'ஊரென்பது உறையூர்' என்றுரைப்பர். அந்த உறையூரினும் பெரிது கருவூர் என்று வரலாற்றில் புகழப்பட்ட கரூர், காலப்பதிவேட்டின் பக்கங்களிலெல்லாம் பதிவு பெற்ற திருவூராகும். தமிழகத்தை மூன்றாய்ப் பிரித்துப் பார்ப்போர்க்கு இது சேரர் தலைநகரென்றும் ஐந்தாய்ப் பகுத்துப் பார்ப்போருக்கு இது கொங்குப் பெருநகராகவும் புலனாகிறது.

நிலவளமும் நீர்வளமும் மலைவளமும் வளர்ந்தோங்கும் தொழில் வளமும் செறிந்த சேர வளநாட்டின் தலை நகர். இந்நகரைச் சுற்றிக் காவிரி, நொய்யல் மற்றும் அமராவதி என்று அழைக்கப்படும் பொருநை ஆகிய ஆறுகள் சூழ்ந்து பாய்கின்றன.

கோதை என்பது சேர மன்னர்தம் சிறப்புப் பெயராதலால்
'கடும் பகட்டு யானை
நெடுந்தேர்க் கோதை'
திருமாவியனர்க் கருவூர் என்றுரைக்கும் அகநானூற்றுப் பாடல் இது சேர நாட்டின் தலைநகரென்பதை உறுதி செய்கிறது.

தமிழகத்தில் இன்று பல மாநகரங்கள் உள்ளன. ஆனால், கரூர் சோழர் ஆட்சியில் சீர்பெற்றுத் திகழ்ந்ததென்பதும் சேக்கிழார் காலத்திலேயே மாநகராய் விளங்கியதென்பதும்,

'மன்னிய அநபாயன் சீர்
மரபின் மாநகரம் ஆகும்
தொன்னெடுங் கருவூர்
என்னும் சுடர்மணி வீதி மூதூர்'
என்று வரும் அவரது பாடல் வரிகளால் உணரக்கூடும்.

கரூரின் தனிச்சிறப்புகளை ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பே நாடறியும். அசோகரின் கல்வெட்டில் இதன் ஆட்சியாளர் தனித்துக் குறிப்பிடப்பட்டுள்ளனர். உயர்ந்தோங்கி விளங்கிய சேரமான் அந்துவஞ் சேரலிரும்பொறையும், அவரது மகன் சேரமான் செல்வக்கடுங்கோ வாழியாதனும் அவரது மகன் பாலைபாடிய பெருங்கடுங்கோ என்றழைக்கப்படும் பெருஞ்சேரலிரும்பொறையும் வழி வழியாகக் கரூரை ஆண்ட சேர மன்னர்களாவர்.

இவர்கள் காலத்தில் கரூர் எழில் மிக்க மாநகராக விளங்கியது. கரூர் - அன்று வஞ்சி என்னும் மற்றொரு பெயராலும் அழைக்கப்பட்டு வந்தது. வனப்புற அமைக்கப்பட்டிருந்த மாநகரின் பாதுகாப்புக்காக ஊரைச் சுற்றிலும் புறமதிற் சுவர்கள் எழுப்பப்பட்டிருந்தன. அம்மதிற் சுவர்களில் பொருநையாற்று நீரலைகள் மோதி விளையாடின.

பொருநையாற்றின் மணல்களைக்காட்டிலும், கரூரைச் சுற்றியுள்ள கழனிகளில் விளையும் நெல்மணிகளைக்காட்டிலும் அதிக எண்ணிக்கையிலான காலத்திற்குக் கரூர்த்திரு வேந்தன் வாழ வேண்டுமென வாழ்த்திப்பாடும் புறநானூற்றுப்பாடல்,

'ஊழி வாழி பூழியர் பெருமகன்
செல்வக் கடுங்கோ வாழியாதன்
புல்லிலை வஞ்சிப் புறமதிலலைக்கும்
கல்லென பொருநை மணலினும் மாங்கட்
பல்லூர் சுற்றிய கழனி
எல்லாம் விளையும் நெல்லினும் பலவே'

என்னும் வரிகள் உணர்த்துகிறது.

வடிவமைப்புக்கலை நுணுக்கங்களுடன் வானுயர நின்ற இக்கோட்டைச் சுவர்களின் உறுதிமிக்க தோற்றம் எதிரிகளுக்கு எரிச்சலை ஏற்படுத்தியது. அவர்கள் எதிர்பார்த்த போர் வாய்ப்புக் கிடைத்தபோது அவர்தம் கோப வெறிக்குக் கோட்டைச் சுவர்கள் முதல் இலக்காயின. கரூரின் மீது படையெடுத்த பாண்டிய மன்னன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன் இக்கோட்டைச் சுவர்களையும் காவற்காடுகளையும் சாய்த்தழித்துப் பொருநையாற்றின் வெண் மணல் சிதைந்து தெரிக்குமாறு வீசினான் என ஆலத்தூர்க் கிழாரின் புறநானூற்றுப் பாடல் தெரிவிக்கிறது.

சங்க காலத்தை அடுத்து வந்த களப்பிரர் காலத்திற்குப் பின் கி.பி. ஏழாம் நூற்றாண்டிலும் பாண்டியர் ஆட்சிக்கு உட்பட்டிருந்த கரூரில் பாண்டியர்கள் மீண்டும் கோட்டைகளை அழகுற அமைத்துக் கலைவளர் நகரின் பாதுகாப்பிற்கு அரணுண்டாக்கினர். ஆனால் பாண்டியரிடம் பகை கொண்டிருந்த நந்திவர்மன் கரூரைத் தாக்கிக் கோட்டையை அழித்தான் என்பதைத் திருமங்கை ஆழ்வாரின்,

‘உலகுடை மன்னன் தென்னவனைக்
கன்னி மாமதில் சூழ் கருவூர் வெருவப்
பலபடை சாய வென்றான்’
எனை வரும் பாடல் உணர்த்துகிறது

கன்னி மாமதில் என்னும் குறிப்பு பாண்டியர் கரூர்க் கோட்டையின் பழைய சிதைவுகளை அகற்றிப் புதிய கோட்டையை அமைத்திருந்தனர் என்பதை இயம்புகிறது.

கூத்துக் கலைகள்

ஆடல் கலைகளிலும் சேர வேந்தர்கள் வல்லவர்களாகத் திகழ்ந்தனர். ஆட்டத்தில் சிறந்த சேரலாதன் ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் என்றழைக்கப்பட்டான். இசையும் கூத்தும் கரூரில் போற்றப்பட்டதற்கு ஆதாரங்கள் உள்ளன. கல்லணையைக் கட்டிய கரிகாற் பெருவளத்தானின் மகள் ஆதிமந்தியை மணந்த கரூர் வேந்தன் ஆட்டனத்தி ஆடற்கலையில் வல்லவன். நிலத்தில் ஆடும் ஆட்டம் மட்டுமல்லாது நீரில் ஆடும் ஆட்டமான புனல் விளையாட்டிலும் தேர்ச்சி பெற்றவன்.

கரிகாலன் காவிரியில் புதுப்புனல் பெருக்குவிழா நடத்தினான். மக்களனைவரும் ஆடிப்பாடிக் கொண்டாடி மகிழ்ந்திருந்தனர். விழாவில் கலந்து கொண்ட ஆட்டனத்தி தன் புனலாட்டத் திறமையை மாமனுக்கு ஆடிக்காட்ட விரும்பினான். கழாஅர் என்னும் காவிரித் துறை அருகில் மக்களும் மன்னரும் கண்டு களிக்குமாறு ஆற்றிலிரங்கிப் பாய்ந்து சுழன்று ஆடிச் சிறப்பித்தான். மாயமோ மந்திரமோ என வியந்து மன்னனும் மக்களும் மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கிக் கொண்டிருந்த வேளையில் திடீரென உயர்ந்த வெள்ளப் பெருக்கம் சுழல் விசையும் ஆட்டனத்தியை அடித்துச் சென்றுவிட்டன. இயல்பாக நடந்த இந்தச் சோகத்திற்கு இலக்கியச் சுவையேற்றி ஆட்டனத்தியின் கட்டழகில் மயங்கி காவிரிதான் அவனை அடித்துச் சென்று ஒளித்து வைத்துவிட்டாள் என நயம்பட உரைக்கிறது பரணரின் அகநானூற்றுப் பாடலொன்று.

கரூரில் ஆண்ட மன்னர்கள் மட்டுமல்லாமல் மக்களும் பல வகையான இசை நடனங்களை நிகழ்த்தி மகிழ்ந்தனர். மேடைகளில் மட்டுமன்றி மக்கள் வாழ்வின் பல நிகழ்வுகளிலும்

இவை இடம் பெற்றன. அரிசில் கிழாரின் பதிற்றுப்பத்துப் பாடல் ஒன்று அறுவடைக் காலங்களில் மக்கள் வயலில் குறவைக் கூத்து என்னும் ஓர் ஆட்டத்தை ஆடி மகிழ்ந்ததைப் பதிவு செய்துள்ளது. குறுந்தொகைப் பாடல் ஒன்று ஆடவரும் பெண்டிரும் இடம் பெறும் மற்றொரு ஆட்டத்தின் பெயர் 'துணங்கைக் கூத்து' என்று குறிப்பிடுகிறது. போர்க்களத்தில் வெற்றி பெற்றோர் கூட மகிழ்ந்தாடுவதற்கென ஒரு ஆட்டத்தை வைத்திருந்தனர். அது 'அமலைக் கூத்து' என்று கூறப்பட்டது.

ஓவியக்கலை

"எழுதெழில் மழைக்கண் கலுழ நோய் கூர்ந்து" வருந்திய தலைவியைத் தோழி தேற்றுவதாகக் காட்டும் அகநானூற்றுப் பாடல் இங்கு ஓவியக் கலைக்கு இருந்த சிறப்பினைத் தெரிவிக்கிறது.

கரூர்க் கோடங்கிப்பட்டி முத்தாலம்மன் கோயிலில் திருமால் அவதாரங்கள், திரௌபதி, பஞ்சபாண்டவர்கள், கண்ணப்ப நாயனார் போன்ற 18 ஆம் நூற்றாண்டு ஓவியங்கள் இன்னமும் கண்டு மகிழத்தக்கவையாக உள்ளன.

சிற்பக்கலை

கரூரில் சிற்பக்கலையும் சிறந்தோங்கி வளர்ந்துள்ளது. தொன்மை வரலாற்றுக் காலத்திலேயே செம்மை பெற்றிருந்த இக்கலைக்கு மண்மங்கலம் அகழாய்வில் கிடைத்த தாயும் சேயும் சேர்த்து வடிக்கப்பட்ட கலை வடிவம் ஒரு முன்னோடி என்று கூறலாம். இக்கலைப் பெருமையைத் தாந்தோணி பெருமாள் கோயிலிலும், பசுபதீசுவரர் ஆலயக் கோபுரத்தில் அமைக்கப்பட்டுள்ள அழகிய சிற்ப உருவங்களிலும் கண்டுணரலாம்.

ஊர் மக்களையும் கால்நடைகளையும் காக்க எதிரிகளோடும், புலி போன்ற கொடிய விலங்குகளோடும் போர் புரிந்து வீர மரணம் அடைபவர்களுக்குக் கல்லெடுப்பது பழந்தமிழ் மரபு. வீரனின் உருவத்தை அவன் போரிடும் நிலையில் வடித்துக் கல் நாட்டி வழிபடுவர். இக்கற்களை வீரக்கல், பட்டவன் கல், புலி குத்திக்கல் என்றெல்லாம கூறுவர். இதுபோன்ற கற்கள் கரூர் நகரைச் சுற்றியுள்ள பல இடங்களில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. சில கற்களில் கல்வெட்டுகளும் உள்ளன.

படிமக்கலை

தென்னிந்தியப் படிமங்கள் என அழைக்கப்படும் பஞ்சலோகச் சிற்பக்கலை உலகப்புகழ் பெற்றது. பெருங்கற்காலத்தில் தொடங்கிய இக்கலைக்கு நாமறிந்த முதல் தொல்பொருள் சான்று ஆதிச்ச நல்லூரில் கிடைத்த தாய்த்தெய்வமாகும். இக்கலை பல்லவர் காலத்தில் புதிய ஊக்கம் பெற்றுச் சோழர் காலத்தில் சிறப்பு நிலையை அடைந்தது.

கரூரை ஆண்ட மன்னன் பெருஞ்சேரலிரும்பொறை தங்கப்பாவை ஒன்றைச் செய்து கொல்லி மலையில் வைத்து வணங்கி வந்ததாகவும் அது கொல்லிப் பாவை என்றழைக்கப்பட்டதாகவும் கல்லாடனாரின் அகநானூற்றுப்பாடல் குறிப்பிடுகிறது. இதே கருத்து நற்றிணைப் பாடலிலும் இடம் பெற்றுள்ளது. இது போன்ற செப்புத் திருமேனிகளின் எழில் வடிவைக் கரூர் அரசு அருங்காட்சியகத்தில் காணலாம்.

வணிகப்பெருமை

கரூரிலும் அதைச் சுற்றியுள்ள புகலூர், மணமங்கலம், மணக்கோயிலூர், அரவக்குறிச்சி, சின்ன ஆண்டார் கோயில், திருமுக்கூடல் போன்ற இடங்களில் மேற்கொண்ட அகழாய்வுகளிலும், அமராவதி ஆற்றுப்பகுதிகளிலும் பல்வேறு காலங்களையும் பல்வேறு மன்னர்களையும் சார்ந்த காசுகள் கிடைத்துள்ளன.

இவற்றுள் சங்க காலக் காசுகளும், அதே காலத்தைச்சேர்ந்த உரோமானிய மன்னர்கள் காசுகளும், குத்துக்குறி நாணயங்களும் குறிப்பிடத்தக்கவை. காசுகளின் தொடக்க காலத்தில் கிடைத்திருப்பது தமிழகத்தின் பழம் பெருமைக்குக் கூடுதல் உறுதியைக் கொடுத்துள்ளது. இக்காசுகளின் ஒரு பக்கத்தில் வளை முகடுகள், சூரியன், சந்திரன், மீன் தொட்டி ஆகியவையும் மறுபக்கத்தில் சேரரின் இலச்சினையான வில் அம்பும் உள்ளன.

பழைய தமிழி எழுத்து வடிவில் மாக்கோதை என்ற எழுத்துகளும் மன்னரின் உருவமும் கொண்ட காசும் இங்கு கிடைத்துள்ளது. இவை தவிர, இங்கு முத்திரை மோதிரங்களும் உருவங்கள் வடிக்கப்பட்ட மோதிரங்களும் கிடைத்துள்ளன.

பல நாட்டு நாணயங்களும் பெருமளவில் இங்கு கிடைத்து வருவது பண்டைக் காலத்திலேயே கரூர் மிகப்பெரிய பன்னாட்டு வணிக மையமாகத் திகழ்ந்ததைக் காட்டுகிறது. அக்கால வணிக வழித்தடங்கள் பலவும் கரூரை இணைத்திருந்தன. சேரர் துறைமுகமான முசிறி வழியாக வெளிநாட்டார் வந்து சென்றதை

'பேரியாற்று வெண்ணுறை கலங்க யவனர் தந்தவினை
மாணன் கலிம் பொன்னொடு வந்து கறியொடு பெயரும்
வளங்கெழு முசிறி'
என்னும் தாயங் கண்ணனார் பாடல் காட்டுகிறது.

கல்வெட்டுகள்

பல்வேறு காலங்களைச் சேர்ந்த கல்வெட்டுகள் கரூரிலும் சுற்றுப்பகுதிகளிலும் காணப்படுகின்றன. புகலூரிலுள்ள தமிழிக் கல்வெட்டு சிறப்பு மிக்கது. சமணத் துறவிக்குச் சேர மன்னனின் மரபு வரிசையையும் தெரிவிக்கிறது. இவை தவிர கரூரில் சோழர் மற்றும் பிற்காலப் பாண்டியர் கல்வெட்டுகளும் உள்ளன.

தொழிற்கலை

கரூரின் நெசவுக்கலை சிறப்பு மிக்கது. போட்டிகளுக்கிடையிலும் இக்கலை இன்றும் தளராது இயங்கி வருகிறது. இவ்வூரின் பின்னலாடைத் தொழிலும் கலை நயம் மிக்கதே. கொசுவலைத் தயாரிப்பில் தென்னிந்தியாவில் கரூரே முதலிடம் வகிக்கிறது.

அழகிய பேருந்துக் கட்டுமானப் பணிக்கும் இவ்வூர் பெயர் பெற்றது. சாதாரணப் பயணிகள் பேருந்து முதல் பல நிலைகளிலான சொகுசுப் பேருந்துகளும் இங்கு கட்டப்படுகின்றன.

கலைச் சிறப்பிலும் வரலாற்றுப் பெருமையிலும் வாணிபச் செழிப்பிலும் வளர்ந்த வந்த இவ்வூர் இன்று பல்வேறு ஆலைகளுடன் தொழில் நகரமாகவும் திகழ்கிறது.

அகழ்வைப்பகமும் அருங்காட்சியகமும்

கலைக் கருவூலமான கரூரின் கலை மற்றும் வரலாற்றுச் சின்னங்கள் தமிழகத் தொல்லியல் துறையின் அகழ்

வைப்பகத்திலும் அருங்காட்சியகத் துறையின் அரசு அருங்காட்சியகத்திலும் பொது மக்களும் மாணவர்களும் ஆராய்ச்சியாளர்களும் கண்டு பயனுறும் வகையில் காட்சியில் வைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு ஒரு புதிய மாவட்டத் தலைநகரில் இரண்டு அருங்காட்சியகங்கள் அமைந்திருப்பதும் அதன் கலைச் சிறப்புக்குப் பெருமை சேர்க்கும் சான்றுகள்தானே.

*காப்பாட்சியர், அரசு அருங்காட்சியகம்,
திருச்சிராப்பள்ளி - 620 002.

புதுக்கோட்டையில் புதிய கல்வெட்டுகள்

முனைவர். ஜெ. ராஜாமுகமது*

புதுக்கோட்டையில் முன்னாள் சமஸ்தானத்தினரின் ஆட்சி காலத்தில் அங்குள்ள கோயில்களிலுள்ள சுமார் 1200 கல்வெட்டுகள் பதிவு செய்யப்பட்டு, அவை ..... என 1920-ம் ஆண்டு வெளியிடப்பட்டது. இருப்பினும் புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள கோயில்களில் இன்னும் பதிவு செய்யப்படாத கல்வெட்டுகளும் நிறைய காணப்படுகின்றன. இதுபோன்ற பல கல்வெட்டுகளைக் கண்டுபிடித்து அவற்றைப் படிஎடுத்து, ஆய்வு செய்து அவை வெளி உலகிற்கு கட்டுரையாளரால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. கடந்த சில மாதங்களில் பல கோயில்களில் கள ஆய்வு மேற்கொண்டு கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுகளில் காணப்படும் செய்திகள் தமிழ்நாட்டு வரலாற்றிற்கு புதுப்பொலிவளிக்கின்றன.

மடத்துக் கோயில் கல்வெட்டுகள்

1) இடம் : புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர்வட்டம் மடத்துக் கோயில் திருப்பெருமானாண்டார் கோவில் முதல் பிரகாரம் நுழைவுவாயில் தெற்கு சுவற்றிலுள்ள கல்வெட்டு.

காலம் : கி.பி.1147

செய்தி : இரண்டாம் குலோத்துங்க சோழனின் 14வது ஆட்சியாண்டில் இக்கோயிலுக்கு அருகிலுள்ள பார்குடி ஊரார் 160 காசு கொடையளித்து திருவிழாக்களும் வழிபாடும் நடைபெறச் செய்தது குறித்து.

1. ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் குலோ

2. த்துங்க சோழ தேவற்கு யாண்டு 14 வ

3. து இரட்டபாடி கொண்ட சோழ வளநா

4. ட்டு உறத்தூரா கூற்றத்து வடகோநாட்

5. டு உடையார் திரு பெருமா நாண்டார்

6. கோயில் சீகாரியஞ் செய்வாரு(ம்) ஸ்ரீ மாயேசுவ

7. ர கண்காணி செய்வாற்கும் தேவகந்மி கொ(யிற்)

8. கணக்கும் பாற்குடி ஊரோமும்

9. இவ்வனவோமும் இந்நாட்டு இக்கூற்றத்து வியாபாரி

10. குடையாந் அவையம் புக்காந் தேவனுக்கு

11. நாங்கள் உபயம் பண்ணிக்குடுத்த ப

12. ரிசாவது இந்நாய நார் கோயில் மாஸித்தி

13. ருநாள் எழுந்தருளுகைகு உபையமிக தைய் மா

14. ஸமுதல் ஒடுக்கின காசு 160 இக்காசு நூற்ற

15. றுபதும் சிபாண்டாரத்தே ஒடுக்கிவித்

16. துக் கொண்டு மாஸம் தோறும் எழுந்

17. தருளிவிக்க மடத்து அமுதுபடி அரிசி

18. ங (குறுணி) சட்டிச் சோற்றுக்கு அரிசி (குறுணி)ம்

19. ஆக அரிசி பதக்கும் திருவிளக்கெண்ணை

20. யும் ம(ற்றும்) வேண்டும் விஞ்சனங்களும்

21. ...டலில் .. விட்டு கடவோமாக இப்படிசம்மதித்துகொ..

22. தருளிவிக்க கடவோமாக இப்படி சம்மதித்து கொ

23. ...த்தரு பண்டாராத்தே கைக்கொண்டு எழுந்தரு

24. ளிவிக்க கடவோமாக சம்மதித்து உபைய

25. ம்பண்ணிக் குடுத்தோம அவையம் புக்கானசெ.....

2) இடம் : அத்த கோயில் முதல் பிரகார்ம் நுழைவு வாயிலுக்கு வடக்குப் பக்கம் உள்ள சுவற்றிலுள்ள கல்வெட்டு.

காலம : கி.பி. 13ம் நூற்றாண்டு

செய்தி : குலசேகர பாண்டியனின் (ஆட்சித் தொடக்கம் கி.பி. 1260) பதினான்காவது ஆட்சி யாண்டில் உலக மகாதேவி பட்டினம் என்ற தேவி பட்டினத்தைச் சேர்ந்த பெரும்படைத் தலைவன் செய்யானன் இக்கோயிலுக்கு தட்டோடு பாவியதைத் தெரிவிக்கிறது.

1. ஸ்வஸ்தி
2. குலை சேகர
3. தேவற்கு யாண்டு
4. 14வது வடகோ
5. னாட்டு உடையார்
6. திருப் பெருமாநா
7. ண்ட னாயநார் கோ
8. யில் தட்டோடு
9. செய்தான் செவி
10. ருக்கை செம்பிய
11. காட்டு சீரிளங்கோ
12. மங்கலமான உல
13. கமா தேவிபட்டணத்

14. து செய்யானன் முன

15. யான் சீர .... திருதெ

16. ... லி உடையா

17. னான பெரும்படை

18. வெளைக்காற

19. ன் தமம் உ

3) இடம் : அதே கோயில் வளாகத்தில் கிடக்கும் ஒரு தூணில் காணப்படும் கல்வெட்டு.

காலம் : கி.பி. 15ம் நூற்றாண்டு

1. ஸ்வஸ்திஸ்ரீ

2. மடத்தில்

3. கைக்கோள

4. ரில் அவ்வய

5. ர் பரம்பை

6. யூர் விழுப்

7. பாதாராயர்

8. ஆசிரியம்

4) இடம் : அதே கோயில் வளாகத்தில் கிடக்கும் ஒரு தூணில் காணப்படும் கல்வெட்டு

காலம் : கி.பி. 15ம் நூற்றாண்டு

1. ஸ்வஸிதஸ்ரீ

2. வடகோனாட்டு

3. உடையா(ர்) திரு

4. பபெருமாண்டநா

5. யனா கோயிலிற் திரு

6. ப்பணியும் இன்நாயன

7. ர் தேவதானமும் உடை

8. யார் மழவராயர் ஆசிரியம்

5) இடம் : அதே கோயிலிலுள்ள ஒரு தூணில் காணப்படும் கல்வெட்டு

காலம் : கி.பி. 15ம் நூற்றாண்டு

செய்தி : இரவியுடையார் ஞானதேவர் திருப்பெருமானாண்ட நாயனார் கோயிலுக்கு திருமஞ்சன கிணறு அமைந்ததைத் தெரிவிக்கிறது.

1. ஸ்வஸ்தி ஸ்ரீ உடை

2. யார் திருப் பெ

3. ருமானாண்ட

4. நாயனார் திரும

5. ஞ்சனக் கிணறு

6. இரவியுடையார்

7. ஞான தேவர் த

8. ன் மம். உ

7) இடம் : அதே கோயில் முதல் பிரகாரம் நுழைவு வாயிலில் வலதுபுறம் உள்ள முப்பட்டைக் குமுதத்திலுள்ள கல்வெட்டு.

காலம் : கி.பி.1178-1223

செய்தி : திருப்பெருமானாண்டார் கோயில் தேவதானத்து கோயில் பிடிச்ச முதலிகள் உழவாரப்பணி செய்வது பற்றியது

1. ஸ்வஸ்தி-ஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் குலோத்துங்க சோழ

2. தேவற் ..யாண்டு ... பதினாலாவது முதல் இரட்டப்பாடி கொண்ட சோழவ

3. ளநாட்டு உறத்தூர் கூற்றத்து வட கோநாட்டு உடையார் திருப்பெருமான்

4. டார் தேவதானங்களில் கோயில் பிடிச்ச முதலிகள் ஆரேனுமாவார் கோயிற்றம...

5. மென்று புகுந்தா(ர்) இன்னாய நா(ர்) தேவதானங்களில் வாரத்துக்கு வரிசைக்

6. கு உழுவாருண்டாகில் திருவாண் உன்றிய கச்சன இவ்வாண்மை மாத்து..

7. உழுவாருண்டாகில் தங்களம்மை க்கு தானே மிணாளன் பண்மாயேஸ்வர ரட்சை.

(இதற்கு முன் இக்கோயிலில் 14 கல்வெட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன)

மறவா மதுரை கல்வெட்டுகள்

1) இடம் : புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் வட்டம், மறவா மதுரை அகளங்கீசுபரர் கோயில் கருவறையின் வடபுறச் சுவர் முப்பட்டைக் குமுதத்திலுள்ள கல்வெட்டு

காலம் : சகாத்தம் 1381

செய்தி : கல்வாசல் நாட்டு குலசேகரபுரத்து திருவெட்பூருடையான் என்ற

இன்பவனப் பெருமாள் திருமுணமழகியாற் மேற்படியூர் கழனிவாசனுடையான் செழியதரையர் ஆவுடையாரான சோளக தடியாண்டாற் குடியுடையான் சூரிய தேவநாகதேவ அரும்பாற்கிழான் கற்பக பிள்ளை யார் கல்வாசநாட்டு ஏழகப் பெருந்தெருவான வீரபாண்டிய புரத்து கழனிவாச லுடையான் தேசிநாராயணபுரத்து கழனிநல்லூர் பெருமாள் தம்பிரான் தோழர் ஆகியவர்களுக்கு வடமதுரை என்ற மறவன்மதிரை ஊரவர் அவ்வூர் குளம் பேருடைப்பு எடுத்ததை அடைக்க இயலாது மேற்கண்டவர்களை, அடைத்துத் தருமாறு வேண்டி நிலப் பிரமாணம் செய்தமைக்கான கல்வெட்டு.

1. சகாத்தம் ஆயிரத்து முன்நூற்று எண்பத்தொன்றில் மேல் செல்லா நின்ற பிரமாதி வருஷம் தை மாதம் 12 உ கல்வாசல் நாட்டு குலசேகரபுரத்து திருவேட்பூருடையான் இன்பவனப் பெருமாள் திருமுண்யயழகியாற்கும் மேற்பழயூர் கழனிவாசலுடையான் செழிய தரையர் ஆவுடையார்க்கும் இவர் தம்பி தருகன் கை தழயாண்டற்கும்

2. மேற்படி குடியுடையான் சூரிய தேவர் நாக தேவற்கும் மேற்படியூர் அரும்பாற் கிழான் கற்பகப் பிள்ளையார் பெரிய பிள்ளையாற்கும் (கல்வாசல்) நாட்டு ஏழகப் பெருந் தெருவான வீரபாண்டியபுரத்து கழனிவாசலுடையான் சிந்தாமனி தேவர் ஆவுடையாற்கும் பாலையூர் நாட்டு வேலங்குடியான

3. (தேசிநாராயண) புரத்து கழனி நல்லூருடையர்ன திருவாரூர் பெருமாள் தம்பிரான் தோழர்க்கும் இவ்வனைவற்கும் பொன்னமராவதி நாட்டுப் பற்று வடமதுரை ஊராக வமைந்த ஊரவரோம் காணி ஆட்சி விலைப் பிரமாணம் பண்ணி குடுத்த பரிசாவது எங்களூர் குளம் பேருடைப்பாக உடைக்கை

4. யில எங்களால் அடைக்கயியலாமல் இருபத்து அஞ்சு வருஷம் உடைகுளப்பட்டு கிடக்கயில் இது அடைக்க வேண்டின படியாலே இதுக்கு வேண்டத் தக்க அத்தம் வர உடைப்பு அடைக்கையில் இவர்களுக்கு இந்த குளமும் உடைப்பும் இவ்வூர் புரவில் நான்கெல்லைக் குள்பட்ட நன்செய் புன்செயும் குடிகாட்டுப் பற்றும் வயல்களும் நத்தமும் நத்தப்பாடும் கீணோக்கின கிண

5. றும் மேனோக்கியமரமும் வாழ மரம் த(ா)ழை மரமும் கோயிற் சுவந்திரமும் குளச் சுவந்திரம் மன்றுமனை கூறு குறங்கு இடையர் வலையர் ஆடி காத்திகை சுவந்திரம் நீர்கூலி பறைகூலி சுடுகாடு படுதுறை புறக்குடி .... உண்டான சுவந்திரம் .... (இலு)ப்பை பனை மரமும் மற்றும் ஊராலுண்டான சுவந்திரம் எர்பேர் பட்டனவும் அகால் ஆறில் ஒன்றும் முன்னடைவாக ஆண்டு போகக்கடவார்களாகவும் இவர்

6. ..... தானாதன்ம விக்கிறகங்களுக்கு உரித்தாவதாகவும் இப்படி சம்மதித்து ஊராவரோம் அளக்க கடவராகவும் எற்சோறு வினியோகம் கடவராகவும் படை நாங்களே சேவிக்க கடவோமாகவும் மேல்தனம்உ .....க்கால் இவர்களும் ஆறிலொன்று கூட அமைக்க கடவார்களாக

7. இந்தப்படி சம்மதித்து சன்திறாத்தவரை செல்ல கல்வெட்டி குடுத்தோம் முந்பேசப்பட்ட அனைவற்கும் உள்பட்ட ..... இந்த ஊரவரோம் ..... பேர் உடையான் பெரியநாட்டுத் தட்டான் எழுத்து அறிவுடை முவேன்த வேளார் திருச்சிராப்பள்ளி உடையான் உள்ளிட்டார் எழுத்து காடப்பிள்ளை சோழ கோனார்

8. ..... நஞ்சாண்டர் அசையவித்தர்க்கு மூலகுடி ..... நாகதேவர் உடையார் எழுத்து பகவனார் தற்குறிக்கு மாட்டறிந்தேன் ..... இந்த எழுத்து ..... அடைக்கலங்காத்தான் பிள்ளான் எழுத்து உய்யாண்டாரான கொடி .....

2) இடம் : அதே கோயில் கருவறையின் தெற்குச் சுவரில் உள்ள கல்வெட்டு

காலம் : சக ஆண்டு 1449

செய்தி : மறவன் மதுரை ஊரிலிருந்த சோழகோல முறியவெட்டி பறந்து வெட்டி முதலியோருக்கு நிலவிலைப் பிரமாணம் செய்து கொடுத்தமைக்கான கல்வெட்டு.

1. சகாத்தம் 1449

2. மேல்செல்

3. லா நின்ற வி

4. ய ..... மார்கழி

5. மாதம் 2 தியதி தரு

6. .....

7. வணிகுடியார் உள்ளி

8. .....

9. கு மறவன் மதிரை ஊர

10. வரில் இம்பன் சோர்கோ

11. உள்ளிட்டாரும் ஆவுடையானா .....

12. முறியவெட்டி யுள்ளிட்டாரும் வெய்

13. தடத்தாறான பறந்து வெட்டியுள்ளி

14. ட்டாரும்மெ காணிய ..... வி(லை)

15. பிரமாணம் பண்ணிக் குடுத்தபடி இற்றை நாள் எங்களுக்கு பண மிடை .....

16. தனாமான படியாலே இவ்வூர் ஊரதுபு

17. றவு நான்கெல்லையுள்ப்பட்ட காணியாட்சி முற்றிலும் செட்புயள் விழுக்காடு ஆறி

18. லொன்றும் கணக்கனார் விழுக்காடு நா

19. லிலொன்றும் கண்டியதேவன்

20. ழுக்காடு எட்டிலொன்றும் எழுவாண்

21. டன் விழுக்காடு இருபதிலொன்றும்

22. நித்தி மார் விழுக்காடு நாலிலொன்

23. றும் குளமும் வயலும் இவ்வூரில் நா(ங்)கெ

24. ல்லையுள் பட்ட நன்செய் புஞ்செய்

25. குடிக்காட்டுப் பற்று வயல்களும் நத்தமு

26. ம் நத்தப்பாடும் கீழ்நோக்கிய கிண

27. றும் மேல்நோக்கியமரமும் .....

(இதற்கு முன் இக்கோயிலில் 5 கல்வெட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன)

ஒலியமங்கலம் கல்வெட்டுகள்

1) இடம் : புதுக்கோட்டை மாவட்டம் திருமயம், வட்டம் ஒலியமங்கலம் (சங்க கால ஒல்லையூர்), பெரிய கண்மாய் பெரிய மடைத்தூணில் உள்ள கல்வெட்டு

காலம் : கி.பி. 1063 - 1069

செய்தி : வீரசோழதேவர் என்ற மூன்றாம் இராஜேந்திர சோழனின் 4வது ஆட்சியாண்டில் ஒல்லையூர் குளத்து குமிழியை கங்கர் சோழகுல நாராயணன் என்ற முவேந்த வேளாண் செய்தமை பற்றிய பாடல் கல்வெட்டு.

1. ஸ்வஸ்தி ஸ்ரீ நடையா

2. ர் தநிச் செங்கோல் வீர

3. சோழற்கி யாண்டு நாலா

4. ண்டில் குடையார் வ

5. ண்கை ஒல்லையூர் கு

6. ளத்துக் கும்ழி குயிற்று

7. குடுத்தோன் தொடையார் (க)

8. ங்கர் சோழகுல நாராய

9. ண மூவேந்த வேள் ஆ(வு)

10. டையார் சீயமிடைக்குழ ம

11. ந்து நிலவும் கேசவ

12. நேய் .....

2) இடம் : புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் வட்டம். ஒலியமங்கலம் (சங்க கால ஒல்லையூர்) வரகுணேகபரர் கோயில் அர்த்த மண்டபத்து தெற்கு வெளிப்புறச் சவரிலுள்ள கல்வெட்டு

காலம் : கி.பி. 13ஆம் நூற்றாண்டு

செய்தி : ஒல்லையூர் வரகுண ஈசுபரர் கோயில் சித்திரைத் திருநாளில் அக்கோயில் இறைவன் எழுந்தருளுகைக்கு திருவெழுச்சிப் புறமாக அவ்வூர் அகவயல், வேளாவயல், சாத்திவயல், உடையான் வயல் ஆகிய வயல்களில் இரண்டு மாநிலத்தினை குலசேகர பாண்டியன் காலத்தில் வரி நீக்கி இறையிலி நிலமாக கொடுத்ததை தெரிவிக்கிறது.

1. .....

2. .... சி(ரி) எம்மண்டல ..... ளியூ

3. குலசேகர தேவற்கு யா(ண்)

4. டு 30 .... தை ..... நாள் கோனாடானகட

5. லடையாதிலங்கை கொண்ட சோழவள நாட்டு தென்கோனாட்டு ஒல்லையூர்

6. ... ன சோழனுள்ளிட்டாரோம் இவ்வூர் (நாயனார்)

7. வரகுணீஸ்வரமுடைய நாயனார் எழுந்தருளும் சித்திரை திருநாளில் நாங்கள்

8. எழுந்தருளிவிக்கும் திருவெழுச்சிப்படிக்கு திருவெழிச்சிப்புறமாக இவ்வூர் அ

9. கவயல் வேளா .. வ .. விலையாக கொண்ட சாத்தி வயல் துணை

10. நம்பன் கைகலி ..... உடையான் வயக்கல் ... ... கன்று ஆகக் கலி மு

11. வைப்ப இரண்டு மாகாணியும் இவ்வூர் புரவிலும் வரியிலுங் கழித்து இ

12. ரண்டு மாகாணிக்கும் எம்மிலிசைந்த விலை .... பணம் 50ம்

13. இந்த பணம் ஐம்பதும் வி ... நலண்டுமாக ... இக்...கம்

14. குட்பட மேல் நோக்கிய மரமும் கினோக்கிய கிணறுமாக இக் .... கம் இன்னா .....

15. இரண்டு திரு வெழுச்சிக்கு குளமுமாயும் ..... யேர்பட்டதும்

16. ..... தாவம் திருவாசிகை திருவிளக்கு திருச்சாந்து திருமெற்பூச்சு

17. ... நெய்யமுது பெருந் திருப்பா உடையும் கறியமுது வெஞ்சனம் எண் வகை

18. பு .... வித்தாரிசேவை திருவீதியில் பந்தம் வித்தாரி சேவை திருமாலைக

19. உள்ள உபகார பணங்களும் ..... னை இலையமுது அடைக்காயமுது.

20. இந்நிலத்தில் இடு .....

(இதற்கு முன் இக்கோயிலில் 9 கல்வெட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.)

முடிவுரை

கள ஆய்வில் எனக்கு உதவி செய்த ஓய்வு பெற்ற ஆசிரியர் பனையூர் கரு. ராஜேந்திரன் அவர்களுக்கு நன்றி.

*காப்பாட்சியர், அரசு அருங்காட்சியகம்,
புதுக்கோட்டை.

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆசியாவின் உயரமான பாலம்

*திருமதி. சே. கிருஷ்ணம்மாள்**

பாலங்கள் பல உண்டு. ஆனால் ஆசியாவிலேயே மிக உயரமான, நீளமான பாலத்தை தன்னகத்தே கொண்டுள்ள சிறப்பு கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள மாத்துார் என்னும் ஊருக்கு கிடைத்துள்ளது பெருமைக்குரியது.

கன்னியாகுமரியிலிருந்து 60 கி.மீ துாரத்தில் உள்ள திருவட்டாறுக்கு அருகில் உள்ள மாத்துார் என்னும் சிற்றார் அமைந்துள்ளது. இவ்வூரில் பறளியாறு என்ற ஆறு ஓடிக் கொண்டிருக்கிறது. இவ்வாற்றின் குறுக்கே தொட்டிபாலம் ஒன்று கட்டப்பட்டுள்ளது. இப்பாலம் 1966ஆம் ஆண்டு மறைந்த முன்னாள் தமிழக முதலமைச்சரான திரு. காமராஜர் இருந்த போது ரூ.12.90 லட்சம் செலவில் கட்டப்பட்டது. இப்பாலத்தின் உயரம் 104 அடி, நீளம் 1240 அடி ஆகும். இப்பாலத்தின் மேற்பரப்பில் ஒரு பகுதியில் தண்ணீர் செல்லும் பட்டணங்கால் கால்வாயாகவும் தொட்டி வடிவிலும் மறுபகுதி 3 அடி அகலத்தில் நடைபாதையாகப் பயன்படும் வகையில் கட்டப்பட்டுள்ளது.

இப்பாலத்தினை 16 சதுர அடி கன அளவு கொண்ட 28 துாண்கள் தாங்கி நிற்கின்றது. மாத்துார் தொட்டிப்பாலத்தின் நடைபாதை இருபுறமும் கைப்பிடிச்சுவர் இரண்டரை அடி அகல இடைவெளியில் உள்ளது. மாத்துார்–செங்கோடி ஆகிய இரு ஊர்களையும் இணைக்கும் வகையில் இத் தொட்டிப்பாலம் கட்டப்பட்டுள்ளது. இப்பாலம் கல்குளம் மற்றும் விளவங்கோடு தாலுக்காக்களில் வேளாண்மை வளர்ச்சி மற்றும் வறட்சி நிவாரணத்திற்காக பெரிதும் பயன்பட்டு வருகிறது.

துணை நூல்கள்

1. கன்னியாகுமரி மாவட்ட விவரச்சுவடி

2. பெருமாள் ஏ.கே., கன்னியாகுமரி மாவட்ட வரலாறு

**காப்பாட்சியர், அரசு அருங்காட்சியகம்,*
கன்னியாகுமரி

பழந்தமிழ் சமுதாய ஆவணம்

*திருமதி ரு.தே. துளசிபிருந்தா**

வரலாற்றை அறிய உதவும் மூலங்களுள் செப்பேடுகள் முக்கிய இடம் வகிக்கின்றன. சமுதாய ஆவணமாக கருதப்படும் ஒரு செப்பேடு, கிருட்டிணகிரி அருங்காட்சியகச் சேகரிப்பில் உள்ளது. இச் செப்பேடு பற்றிய தகவல்களை இக் கட்டுரையில் காண்போம்.

வரலாற்றில் இதுவரை நமக்குக் கிடைத்துள்ள ஆவணங்களுள் மூன்றாம் இராசராசனுடைய காலத்து செப்பேடு கிடைத்துள்ளது இதுவே முதல் முறை எனக் கருதப்படுகிறது, கிருட்டிணகிரியில் கமார் 700 ஆண்டுகள் பழமையான செப்பேடு கிடைத்துள்ளது. கிருட்டிணகிரியில் வசிக்கும் திரு.கோவிந்தராஜி என்பவருடைய குடும்பத்துக்குச் சொந்தமான இச் செப்பேடு ஒரு சமுதாய ஆவணம். இது 27.5 செ.மீ நீளமும் 18.5 செ.மீ அகலமும் கொண்டு மேல் இடது மற்றும் வலது புறத்தில் சற்று உடைந்து காணப்படுகின்றது.

இச் செப்பேடு நமக்கு கிடைத்துள்ள ஒரு முக்கிய வரலாற்று ஆவணமாகும். இச் செப்பேட்டின் இருபுறமும் எழுதப்படுள்ளது. மொத்தம் 79 வரிகள் உள்ளன. முன்புறம் 48 பின்புறம் 32 வரிகளும் உள்ளன. இவை பழந்தழிழ் வரிகளும் எழுத்தில் எழுதப்பட்டுள்ளன. இச் செப்பேட்டின் மேல் பகுதியில் சூரியன், சந்திரன் குறியீடுகளாக வரையப்பட்டுள்ளன.

செப்பேட்டின் வரிகள் பின்வருமாறு:

... ... சகல தணசம் மண்ணளன பதவாக கபி ... ...

... ... றன் அகண பத லஷ்மி பிறச்சன்னளன் ம ... ...

... ... ச மான திறுன் இடகை சிங்காதனத்து க் ... ...

... ... சாலிய வாகன சாகப்தம் ஆயிரத்து ... ...

... ... ஒன்று கிலியுகம் நாலாயிரத்து நானாற்றி ஒன் ... ...

... ... நாளையிலே ராசாக்கள் கருகாலிச் சோழராசா ராஜ்ய

பார்ம் பண்ணுகையில் ஆரிர் ஒரு கடமை கொண்டவன் அந்

த நாளையிலே ஸ்ரீமுக வருஷம் சித்திரை மாதம் 2ம் தேதி சுக்குற

வாரம் ரோகினி நட்சத்திரம் பெத்த நாளையிலே காஞ்சிபுர
த்திலே காமாட்சியம்மாள் தேர் இடங்கையார் நடப்பிச்சார்
கள் அப்போது வலக்கையாறு மந்திரத்தாரிகள் சலினசிங்க
ன் மந்திரத்தினாலே தடுத்து தேர் நடக்காமலே பண்ணி போயிட்டத்தி
னலே தாம் நடக்காமலே போச்சது. இடங்கைக்கு வலன
கக்கு வசுவாதமாயிருந்து. மலையாளத்திலிருந்து
மந்திர தாரிகள் காஞ்சிபுரத்துக்கு வந்தார்கள் இடக்கை
யனர் என்னவென்று கேட்டார்கள் அதுக்கு இடக்கையார்
சொன்னது உங்களாலே ஆகவேண்டுமென்று சொன்னார்க
ள் நல்லதென்று பன்னிரெண்டு சதியும் மனளயாளம
ந்திரதாரியும் தொணடையில போனார்கள் போயிம
ளையாளத்திலேயிருந்து வந்த மந்திரதாதி தன் கையிலே ஆ
ன மட்டுக்கும் சகலமான பூத பிசாசுகளுக்கு சகலமான கா
வுகளும் கொடுத்தான் அந்த பூதமாகப்பட்டது நரபொலி கேட்டது
மந்திரதாதி பிள்ளையைப் பிடிச்ச தேரை சுத்தி வந்து பூதி பி
சாசுகளுக்கு பிள்ளையைப் வெட்டி காவு கொடுத்து அந்த சிரசை
எடுத்து தேர் சிகித்துக் கட்டி முண்டத்தை தேர் வண்டி நடுவே புதை
ச்ச கோணி கொண்டு மந்திரதாதி மூக்கு நாசிதனுல
கயிறு கொண்டு வந்து குத்தி பன்னிரெண்டாயிரம் பேர் இழுக்குறதே
ரை கையாலே தொடாமல் படிலபடிக்கு நாலு தெருவும் தரிந்துநி
லையில வந்து நின்றது. அப்போது வலமனகையாரை இடக்கையா
ர் ஜெயிச்சார்கள் அப்போட்ட மந்திரதாதி நம்முட பட்டண
த்திலே மந்திரவாதி எசமான் அண்டையிலே ஓலை எழுதி அனுப்பிவை
லே மந்திரதாதி எசமான் அண்டையிலே ஓலை எழுதி அனுப்பிவை
ச்சார்கள் அதுக்கு மலையாளத்து மந்திரதாதி எசமானும் இட
மையார் பன்னிரெண்டு சதியும் காஞ்சிபுரத்திற்கு வந்தார்
கள் அவர்களுக்கு இலசியாய் இப்படி கொத்த மந்திர
தாதிகளை நம்முட பட்டணத்திலே வச்சால் போக ஆகா
தென்று நாலுஇலக்கமும் போகவேண்டுமென்று வன்னி
யர் கொடுத்த புலிக்கொடி பஞ்சாலத்தார் கொடுத்து அனும
க்கொடி ஆயிர கோத்திரம் சொட்டியார் கொடுத்து கெருட
கொடி செங்குந்தி முதலியார் கொடுத்தது பஞ்ச வண்
ணி சானு முத்திரி தொரை சக்கள கொடுத்து இருபசி
பள்ளிப்படி கோசங்கி பிள்ளை குதிரை மேலே நகளு க
ற்றி சுறிபானும் இடது காலுக்கு விலவெண்டை முகுடு ச
த்தி புலிக பாயு புச்சக்கிர கொடை அணை அங்கிச

மாண்டு கைக்கும் அசத்த கடபிடிக்கர பணி மோக
மைமாலையும் பொட்டு அஞ்சு பஞ்சவர்ன 18 ஆயுதமு
... ... டுதது குரு உபதேசமும் சொல்லி காமாட்சியம்மாள் முன்பா
... ... குடுத்த தர்ம பாசனம் வன்னியர் தலைக்கட்

பின்புறம்

டு குரு பாக அரிசி பதக்கு சக்தி பூ
கு பண்ணி பஞ்சாலத்தார் தலைக் கட்
யிக அரிசி பதக்கு ஆயிலகோத்திரம்
தலைக்கட்டு குருபாயிக அரிசி பதக்கு செ
முதலியார் தலைக்கட்டு குருபாயிக அரிசி க்கு
மஞ்சப்பாவாடை முத்திரி தொரைப் தலைகட்டுக் குருபாக
அரிசி பதக்கு நந்தகோபால வாங்குச எடயன் தலைகட்
டுக்கு குருபாயிக அரிசி பதக்கு சக்தி
பூசைக்கு பண்ணிக கோசங்கி பிள்ளை தலைகட்டு
க்குருபாயாக அரிசிபதக்கு சக்தி பூசைக்கு பண்ணக்க
ஸடக்கை அனவரும் எழுதி கொடுத்து தடையில்லாமல் வா
ங்கி கொள்ளவும் கலிணானத்துக்கு காலவரகன மாப்
பிளை கட்டின வெகுமனமாயந்த சாசகனத்துக்கு மடந்து
சிவலிங்கப்பனார் கையெழுத்து அரிய புத்திரக வு
ண்டன் கையெழுத்து உடாபார் பாளையத்து மலவார்ய
ன் கையெழுத்து பஞ்சாலதார் தமாப்பசாரி கைெ
யழுத்து ஆயிரம் கோத்திரம் குழந்தையப்ப செட்டிய
ார் கையேழுத்து முத்துரச கையேழுத்து நந்தகே
ாபல இடையரு கையெழுத்து தேவந்தில பள்ளன்
கையெழுத்து பிறது கோசங்கி பிள்ளை கையெ
முத்து காமாட்சியம்மாள் முன்பாக எழுதி கொடுத்த
தர்ம பாசனம் இது யாதாமொருவர் வகாத
ம் பண்ணினால் கங்கை கரையிலே காராம்
பசுவை கொன்ன தோஷத்திலே போவன்ரி
ஷவத்தை கொன்ன தோஷத்திலே போவன்ரி
போவான் கோரப் பசுவை(படதியே) கொன்
ன தோஷத்திலே போவான் அது
அறிஞ்சு நடப்பி வைக்க உல
கெங்கும் ஒளரி உள்ள மட்டுக்கும் காமா
ட்சி அம்மன் பாதமே துணை
ஆல மங்களம்

இச் செப்பேட்டி முதலில் மெய்க்கீர்த்தியுடன் தொடகப்பட்டு அதைக் தொடர்ந்து காலம் குறிப்பிடப்பட்டுள்ளது. அரசன் பெயர் குறிப்பிடாமல் மெய்க்கீர்த்தியில் குறிப்பிடப்படுவதுபோல் கருங்கலி

சோழ ராசா எனக் குறிப்பிடபபட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து, செப்பேடு எழுதப்பட்டதற்கான தேதி கூறப்படுகிறது. அக் காலத்தில் ஆட்சி செய்த சோழ அரசன் மூன்றாம் இராசராசனுக்குக் கருங்கலிச் சோழன் என்ற பட்டம் உள்ளதாக சான்றுகள் கூறுகின்றன. எனவே, இச் செப்பேட்டின் காலம் கி.பி.1249 என கருதலாம்.

முதலாம் இராசராசன் காலத்தில் இடங்கை, வலங்கை என இரு படைப் பிரிவுகளாக சிறப்பாகச் செயல்பட்டது. இப் படை பிரிவுகளானது பிற்காலத்தில் உட்பூசல் காரணமாக இரு சாதிப்பிரிவுகளாகப் பிரிந்தன. அக் காலத்தில் இச் செப்பேடு குறித்த நிகழ்ச்சி நடந்துள்ளது. அதன்படி இடங்கையார் (இடக்கைப் பிரிவு) காஞ்சிபுரத்தில் காமாட்சி அம்மனுக்கு தேரோட்டம் நடத்தியுள்ளனர். அப்போது வலங்கையார் (வலக்கைப் பிரிவு) அவர்கள் மந்திரவாதி சலின சிங்கன் என்பவன் மந்திரத்தினால் தேரை தடுத்து நிறுத்தினான். அது முதல் தேரோட்டம் நடக்காமல் நின்று போனது. எனவே, இடக்கையார் வலக்கையாருக்கு கட்டுபட்டனர். அச்சமயத்தில் மனலயாளத்திலிருந்து (மலையிலிருந்து) ஒரு மந்திரவாதி காஞ்சிபுரத்துக்கு வந்தார். அவர் இடக்கையாரிடம் என்னவென்று கேட்க, இடக்கையார் மந்திரவாதியிடம் உங்களால் ஒன்று ஆக வேண்டும் என்று கூறினார். சரி என்று மந்திரவாதி பன்னிரண்டு மனைவியருடன் தொண்டை மண்டலம் சென்று சகல விதமான பூத பிசாசுகளுக்கு சகல விதமான காவுகளும் கொடுத்தான். அதற்கு அந்த பூதமானது நரபலி கேட்டது. மந்திரவாதி தன் பிள்ளையையே நரபலி கொடுத்து, தன் மூக்கில் கயிறு கட்டிக் கையால் தொடாமல் தேரை நிலைக்கு (தேர் இருப்பிடம்) கொண்டு வந்தான். அப்போது வலக்கையாரை இடக்கையார் வெற்றி கொண்டார். இத்தகைய சக்தி படைத்த மந்திரவாதிக்கு ஓலை எழுதி அனுப்ப. மந்திரவாதி காஞ்சிபுரத்துக்கு பன்னிரண்டு மனைவியருடன் வந்தார்.மந்திரவாதி அப் பட்டணத்தில் இருக்க வேண்டுமென்று சிலரும் இருக்கக்கூடாது என்று சிலரும் கூறினர். மந்திரவாதி அப் பட்டணத்தை விட்டுப் போக வேண்டுமென்று வன்னியர், பஞ்சாலத்தார், ஆயிரம் கோத்திரம் செட்டியார், செங்குந்த முதலியார், சானு முந்திரி தொரை சக்கள, கோசங்கி பிள்ளை ஆகியோர் தமது சாதிக் கொடிகளைக் கொடுத்து குதிரை மேல் ஏற்றி நகரைச் சுற்றி அழைத்து வந்து ஆடை, அணிகலன்கள் மற்றும் ஆயுதங்களைக் கொடுத்து

மரியாதை செய்து அவரை குருவாகக் ஏற்று காமாட்சியம்மன் முன்பாகக் கொடுத்த தர்ம சாசனம். அத்துடன் தொடர்ந்து சக்திபூஜை செய்வதற்குக் குரு பாகமாக அரிசியைக் கொடுத்துள்ளனர். அரிசியின் அளவு ஒவ்வொரு சாதிக்கும் ஒரு பதக்கு எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒரு பதக்கு என்பது இரண்டு மரக்கால் அளவாகும்) இடக்கையிலுள்ள அனைத்து சாதியினரும் இது போல அரிசியைத் தொடர்ந்து தானமாகக் கொடுப்பதாகவும் எழுதிக் கொடுத்த சாசனம் எனக் குறிப்பிட்டுள்ளது. தொடர்ந்து சாசனத்தில் கையொப்பமிட்டவர்கள் மடத்து சிவலிங்கப்பனார், அரிய புத்திர அகண்டன், உடாபார் பாளையத்து மல வார்யன், பஞ்சாலத்தார் தமாப்பசாரி, ஆயிரம் கோத்திரம் குழந்தையப்பச் செட்டியார், முத்திரசர், நந்த கோபால இடையர், தேவேந்திர பள்ளன், கோசங்கிப் பிள்ளை ஆகியோர் கையெழுத்திட்டு காமாட்சியம்மாள் முன்பாக எழுதிக் கொடுத்த தர்ம சாசனம் இது என்றும் இதற்கு இடையூறு ஏற்படுத்துபவர் கங்கைக் கரையிலே கரவைப்பசு, காளையைக் கொன்ற தோஷம் போன்ற பாவங்களுக்கு ஆளாவார்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் உலகில் ஒளி உள்ளவரைக்கும் இத் தானம் நடைபெற வேண்டுமென்றும் காமாட்சியம்மன் பாதமே துணையென்றும் முடிக்கப்பட்டுள்ளது. அதற்குக் கீழே செப்பேட்டை எழுதியவர் பெயர் தனுங்களம் என எழுதப்பட்டுள்ளது.

இச் செப்பேட்டினை ஆதாரமாகக் கொண்டு மூன்றாம் இராசராசன் காலத்தில் காஞ்சி, தொண்டை மண்டலம் உட்படச் சோழப் பேரரசு பஞ்சமில்லாமல் இருந்ததை அறிய முடிகிறது. மேலும் சாதி சண்டைகள் நடந்ததும், அதனால் மந்திரவாதிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டதும், தானம் கொடுக்கபட்டதையும் அறிய முடிகிறது. மலையாளத்திலிருந்து என்ற வார்த்தைக்கு மலையிருந்து என்று பொருள்படும். எனவே மலையிலிருந்து வந்த மந்திரவாதியை குறிப்பிடுவதால், தொண்டை மண்டலத்திற்கு உட்பட்ட ஊர்களாகிய தற்போதைய வட ஆர்க்காடு மாவட்டம், விழுப்புரம் மாவட்டத்திலிருந்துதான் மந்திரவாதி காஞ்சிக்கு வந்திருக்க வேண்டுமென கருத வேண்டியுள்ளது. மேலும் தற்போது தமிழகத்தில் உள்ள மலையாளிகள் அனனவரும் காஞ்சியுரத்திலிருந்து இம் மலைகளில் குடியேறியவர்கள் எனக் கூறிக்கொள்கின்றனர் என்பதற்குச் சான்றுகள் உள்ளன. தென்னிந்தியாவில் மொகலாயர் ஆட்சி ஏற்பட்ட போது இம் மக்கள்

இங்கு குடியேறியதாகக் கருத வேண்டியுளளது (சுமார் 16ஆம் நூற்றாண்டு). எனவே, அதற்கு முன்பாக சமதளத்தில் வாழ்ந்த இவர்கள், பின்பு அம் மலைகளுக்குக் குடிபெயர்ந்துள்ளனர்.

இவர்களில் சிலரிடம் மாந்திரிகம், மந்திரம், பேய், பிசாசு ஓட்டுதல் போன்றவற்றிலும், பூசாரி குறி சொல்லுதல், சாமியாடுதல், ஆடு வெட்டி பலி கொடுத்தல், சில பூசாரி ஆட்டின் இரத்தத்தைக் குடிப்பது போன்ற வழக்கம் தற்போதும் காணப்படுகிறது. அத்துடன் காளி, மாரியம்மன், பிடாரி அம்மன் வழிபாடு செய்கின்றனர். சக்தி வழிபாட்டின் தொடர்ச்சி காளி வழிபாடு எனக் கருதலாம். இத்துடன் ஆடு பலி கொடுக்கும் வழக்கம் உள்ளது.

இச் செப்பேடுக்குச் சொந்தமான திரு.கோவிந்தராஜி அவர்கள் தந்தையார் திரு. முளகு என்பவரின் சகோதரரின் (அண்ணன்) காலம் வரையில் இக் குடும்பத்தினர் மாந்திரிகத்தில் ஈடுபட்டு வந்தனர். இவர்களை ஒண்டிப் புலிக்காரங்க, மோடிக்காரர், வத்தக்காரர், காவக்காரர் என மக்கள் அழைத்ததாகத் தெரிகிறது. அத்துடன் 30 ஆண்டுகளுக்கு முன்பு வரை இவர்களுக்கு, இவர்கள் செல்கின்ற ஊர்களில்(தருமபுரி மாவட்டத்தில்) இச் செப்பேட்டைக் காட்டினால் அரிசி தானமாக வழங்கப்பட்டது என திரு. முளகு கூறுகின்றார். இவர் தானம் பெறுவதை இகழ்ச்சியாகக் கருதியதால், தான் அறிந்த கூத்து (தெருக்கூத்து) த் தொழிலைச் செய்து கொண்டு கூத்து வாத்தியாராகப் பாடம் சொல்லி வருகிறார்.

வட ஆர்க்காடு ஜவ்வாது மலையாளிகள் தெருக்கூத்தினைக் கற்று ஆடுகின்றனர். அதே போல் வேறு சில மலையாளிகளும் விழாக் காலங்களில் கூத்து நடத்துகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இச் செப்பேட்டுச் செய்தியின் மூலம் அக் காலத்தில் சக்தி வழிபாட்டிற்கும் மந்திரவாதிக்கும் முக்கியத்துவம் வழங்கப்பட்டதை அறிய முடிகிறது. மேலும், காஞ்சி காமாட்சியம்மன் தேர் நிறுத்தப்பட்டதாகவும் ஆலய வழிபாட்டின்போது இடக்கை, வலக்கை பிரிவினரிடையே சண்டை நடந்தது எனவும் இது வரை செவிவழிச் செய்தியாக இருந்தது. தற்போது இச் செப்பேடு ஒரு சான்றாக அமைந்துள்ளது.

** காப்பாட்சியர், அரசு அருங்காட்சியம்,*
கிருட்டிணகிரி 635 001.

பழனி அருகே கண்டுபிடிக்கப்பட்ட வட்டெழுத்துக் கல்வெட்டு மற்றும் நடுகல்

*அ.பெரியசாமி**

திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம் நெய்க்காரப்பட்டி அருகே உள்ள காளமேடு என்ற இடத்தில் இரவிமங்கலம் குளக்கரையில் வட்டெழுத்துக்களுடன் கூடிய கல்வெட்டு ஒன்றும் நடுகல் ஒன்றும் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

பழனிக்கு மேற்கே சுமார் 12 கி.மீ தொலைவில் உள்ளது இரவிமங்களம் குளம். இக்குளத்தின் மதகு அருகே வட்டெழுத்துக்களுடன் கூடிய கல்வெட்டு ஒன்றையும் நடுகல் ஒன்றையும் பழனி அருங்காட்சியகக் காப்பாட்சியர் திரு. அ. பெரியசாமி, மற்றும் நெய்க்காரப்பட்டியைச் சேர்ந்த வங்கிப் பணியாளர் திரு. நாராயணமூர்த்தி ஆகியோர் கள ஆய்வின் போது கண்டுபிடித்தனர். 120 செ.மீ உயரமும் 72 செ.மீ அகலமும் உடைய இக் கல்வெட்டில் கீழ்க்கண்ட 10 வரிகள் தமிழ் வட்டெழுத்துக்களில் பொறிக்கப்பட்டுள்ளன:

1. பொன் மதிற் புகழி உமனனமு–
2. –மனழிற்றம்–பட்டினுந்தென்ன
3. வ கோ னொடு சேரலனழிதரகரோ–னுங்
4. கொண்டு பெற்ற மேதிச் செம்பியன்
5. செங்கோறினசவமுது நடத்தி கரதூ
6. ரிங்கோ னைைக் கொப்பியரய
7. தியதேவன் சாமையன் செய்ததூம்பு வய
8. லிரவிமங்க இ–றி புனறக்குளங்க
9. ரைத்தேம்புரை புனல் மரங்தொழுகுந்
10. து நிமென மொழித் தென்னிலந்தானே

மேற்கண்ட கல்வெட்டில் மன்னனின் ஆட்சி ஆண்டோ அல்லது கல்வெட்டின் காலமோ குறிப்பிடப்படவில்லை. இரவிமங்கலம் குளத்திற்கு தேவன் சாமையன் என்பவன் தூம்பு செய்து கொடுத்த செய்தியை இக் கல்வெட்டு தெரிவிக்கிறது. கடுந்தமிழில், பாடல் வரிகளில் உள்ள இக்கல்வெட்டின் எழுத்து அமைதியைக் கொண்டு

இக் கல்வெட்டு கி.பி.9–10ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக இருக்கலாம் எனக் கருத வாய்ப்புள்ளது.



இரவிமங்கலம் ஊர் இக் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது குறிப்பிடத் தக்கது. இக்கல்வெட்டு, பழனி அரசு அருங்காட்சியகத்திற்கு கொண்டு வரப்பட்டு, காட்சிக்கு வைக்கப் பட்டுள்ளது.

வட்டெழுத்து நடுகல்

இரவிமங்கலம் குளக்கரை அருகே வட்டெழுத்துடன் கூடிய நடுகல் ஒன்றும் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந் நடுகல் 130 செ.மீ. உயரமும் 85 செ.மீ அகலமும் உடையது. நடுக்கல்லில் இரண்டு வீரர்களின் உருவங்கள் கம்பீரத் தோற்றத்துடன் செதுக்கப்பட்டுள்ளன. இரண்டு வீரர்களின் இடது கைகள் வில்லைப் பிடித்த நிலையிலும், வலது கைகள் கொடுவாள் ஏந்திய நிலையிலும் செதுக்கப்பட்டுள்ளன. இரண்டு வீரர்களும் இடுப்பில் அரையாடைகச்சம் அணிந்தும், தலையில் பெரிய கொண்டையுடனும் உள்ளனர். இரண்டு வீரர்களின் பாதங்களுக்கு நடுவே நாய் உருவம் பொறிக்கப்பட்டுள்ளதால், வீரர்கள் காட்டுக்கு வேட்டைக்கு செல்லும் போதோ அல்லது எதிரிகளிடமிருந்து ஆடு மாடுகளை காப்பாற்ற போரிடும் பொழுதோ இறந்திருக்கலாம் எனக் கருத வாய்ப்புள்ளது. அவர்களுக்கு உதவியாக நாய் இருந்திருந்து, அதுவும் போரில் இறந்திருக்கலாம். நன்றி மறவா நாயின் உருவம் நடுகல்லில் பொறிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

நடுகல்லில் உள்ள இரண்டு வீரர்களின் உருவங்களுக்கு மேற்புறத்திலும் இடதுபுறத்திலும் தமிழ்வட்டெழுத்துக்கள் படிக்க முடியாதபடி சிதைந்துள்ளன. பல நூற்றாண்டுகள் ஓடையில் கிடந்ததாலும் தொடர்ச்சியான நீரோட்டத்தாலும் எழுத்துக்கள் அழிந்துள்ள நிலையில், நடுகல்லில் உள்ள வீரர்களின் பெயரையோ, அவர்கள் என்ன காரணத்துக்காக வீரமரணம் அடைந்தார்கள் என்ற விபரமோ அறிய முடியவில்லை. ஒன்பது வரிகளைக் கொண்ட இந்நடுகல்லில் இடதுபுறம் உள்ள 6 வரிகள் மட்டும் ஓரளவு தொடர்பு இல்லாமல் படிக்க முடிகிறது.

1.தவசுப்....
2.ரிபகன....
3.சடையத்....
4.வான்பட்ட
5. ....னீ
6. ...மன்

மேற்கண்ட வட்டெழுத்து வரிகள் மூலம் எந்தச்செய்தியும் அறிய முடியவில்லை. நடுகல்லில் உள்ள வட்டெழுத்துக்களின் எழுத்து அமைதியைக் கொண்டு இந்நடுகல் கி.பி. 9ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக இருக்கலாம் எனக் கருத வாய்ப்புள்ளது.

பழனிப் பகுதியில் கண்டு பிடிக்கப்பட்ட முதல் வட்டெழுத்து நடுகல் இது என்பது குறிப்பிடத்தக்கது. தமிழகத்தின் வடமேற்குப் பகுதியில்தான் அதிக அளவில் நடுகற்கள் கிடைத்துள்ளன. பாண்டிய நாட்டுக்கும் கொங்கு நாட்டுக்கும் எல்லைப்பகுதியாக விளங்கியது பழனி. இப் பகுதி பொதுவாகப் போர்கள் அற்ற அமைதிப் பூங்காவாகவே இருந்திருக்கிறது. எனவே, இப் பகுதியில் நடுகற்கள் கிடைப்பது அரிதாகவே உள்ளது.

பழனிப் பகுதியில் கிடைத்துள்ள இந் நடுகல் பழனி அருங்காட்சியகத்துக்குக் கொண்டு வந்து பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. பழனி அருங்காட்சியகத்தில் 141 வரிகள் கொண்ட கி.பி. 16ம் நூற்றாண்டைச் சேர்ந்த நடுகல் ஏற்கனவே காட்சிப்பகுதியில் வைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. தமிழகத்தில் 141 வரிகள் கொண்ட நடுகல் பழனி அருங்காட்சியகத்தில் உள்ளது என்பது சிறப்பம்சமாகும்.

*காப்பாட்சியர், அருங்காட்சியகம்,
பழனி.

விளக்குகள்

*கு. கருணாநிதி**

இலக்கியங்களில் பண்டைய தமிழ் மக்கள் பயன்படுத்திய விளக்குகள் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.ஆதிச்சநல்லூர் அகழ்வாய்வில் 2700 ஆண்டுகளுக்கு முந்தைய உலோகத்தால் ஆன விளக்குகள் கிடைத்துள்ளன. கல்லாலும், மண்ணாலும் உலோகத்தாலும் விளக்குகள் உருவாக்கப்பட்டன. அழகரை, கங்கை கொண்ட சோழபுரம், காஞ்சிபுரம், மதுரை, பழையாறை, பாஞ்சாலங்குறிச்சி போன்ற இடங்களில் நடந்த அகழாய்வுகளில் பல்வேறு வகையான பண்டைய விளக்குகள் கிடைத்துள்ளன.

தமிழ்நாட்டு ஆலயங்களில் உள்ள சிற்பங்களிலும் செப்புத் திருமேனிகளிலும் வடிக்கப்பட்டுள்ள விளக்குகள் போன்ற விளக்குகள் கிடைக்கின்றன. இவை பாவை விளக்கு, தீபலட்சுமி, நாச்சியார் விளக்கு, விளக்குப் பதுமை. என்ற பெயரில் அழைக்கப்பட்டு வருகின்றன இறந்தோரின் நினைவாக கோயிலுக்கு விளக்குப் பதுமையைக் கொடையாக அளிக்கும் வழக்கம் தமிழ்நாட்டின் தென்பகுதியில் இன்றும் இருந்து வருவதாகக் கூறப்படுகிறது. சோழர்களைத் தொடர்ந்து விசய நகர மன்னர், நாயக்கர், மராட்டியர் நகரத்தார் ஆகியோரால் அளிக்கப்பட்ட விளக்குகள் பல்வேறு வடிவங்களில் காணக் கிடைக்கின்றன.

தமிழ்நாட்டு ஆலயங்களில் வழிபாட்டிற்குரிய விளக்குகள் பல்வேறு பெயர்களில் அழைக்கப்பட்டு வருகின்றன. இப் பெயர்கள் வழிபாட்டு முறைகளுக்கு ஏற்ப வேறுபடுகின்றன. அன்ன விளக்கு, அகல் விளக்கு, அலங்கார விளக்கு, காளா விளக்கு, குத்து விளக்கு, கை விளக்கு, குதிரை விளக்கு, சிம்ம விளக்கு, தூண்டா விளக்கு, தொங்கு விளக்கு, நந்தி விளக்கு, நட்சத்திர விளக்கு, புருஷா மிருக விளக்கு, மாட விளக்கு எனப் பல்வேறு பெயர்களில் அழைக்கப்பட்டுவருகின்றன.

கல்வெட்டுகளில் சந்தி விளக்கு, நந்தா விளக்கு ஆகிய விளக்கு வகைகள் கூறப்படுகின்றன. இறைவன் அருகில் எப்போழுதும் எரிந்து கொண்டிருக்கும் விளக்கு நந்தா விளக்கு எனப்பெயர் பெற்றது. காலை, மாலை ஆகிய இரு நேரங்களில் மட்டும் ஏற்றப்படும் விளக்கு சந்தி விளக்கு எனப்பட்டது.

அரசர்களும் அரசமா தேவிகளும் தங்கள் பிறந்த நாளிலும் மங்கள நாளிலும் பல விளக்குகளை வெள்ளியிலும் செம்பிலும் செய்து

அளித்து வந்துள்ளனர். பெருமக்களும் பொதுமக்களும், விளக்குதானம் அளித்து வந்துள்ளமை கல்வெட்டுகளில் காணப்படுகின்றன.

தமிழ்நாட்டுக் கோயில் கல்வெட்டுகள் கோயில்களுக்கு விளக்குகள் தானமாக அளிக்கப்பட்ட செய்தியினைக் கூறுகின்றன.

கோயில் விளக்குகளுக்காக அளிக்கப்பட்ட நிலம் திருவிளக்குப்புரம் என அழைக்கப்பட்டது. முதலாம் இராஜராஜனின் கல்வெட்டு ஒன்று மாத்தூர் சிவன் கோயிலுக்கு ஐந்துநிலைக் குத்துவிளக்கு, மூன்றுநிலைக் குத்துவிளக்கு கொடுத்ததைக் குறிப்பிடுகிறது. இராஜராஜனின் தேவியான உலகமகாதேவி திருவையாறு கோயிலுக்கு ஈச்சியல் விளக்கு, மலையான்சியல் விளக்கு, சோழச்சியல் விளக்கு, ஆர்க்குட விளக்கு, அனந்தலை விளக்குகளை அளித்தார் என அவற்றின் எடைகளோடு கல்வெட்டுகள் குறிக்கின்றன.

திருவாரூர் திருக்கோவிலில் கி.பி.11 ஆம் நூற்றாண்டில் அணுக்கிய ராக ஆடல் புரிந்த ஒரு பெண்மணி நக்கன்பறவை நங்கை என்பவள் நாட்டை ஆண்ட மன்னன் இராஜேந்திரனின் மனம் கவர்ந்தவள்.ஆரூரான் திருக்கோயிலுக்குள் நுழைந்து இறைவன் முன்பு வணங்கி நின்றனர். அவர்கள் நின்று வணங்கிய இடத்தின் நினைவாக ஒரு குத்துவிளக்கு ஏற்றி வைக்கப்பட்டது.

'உடையார் ஸ்ரீ ராஜேந்திர சோழ தேவரும் அணுக்கியார்பறவை நங்கை யாரும் நிற்குமிடம் தெரியும் குத்துவிளக்கு ஒன்றும்' என கல்வெட்டு குறிக்கிறது. இதைத் தவிர 15570 பலம் எடையுள்ள 28 பிரமாண்டமான குத்துவிளக்குகளை அளித்தாள் பரவை நங்கை. எனவே, அக் காலத்தில் பல விளக்குகள் பெயரிடப்பட்டு வழக்கத்தில் இருந்ததைக் கல்வெட்டுகளால் அறிய முடிகிறது. இவ்வாறு, காலந்தோறும் வழிபாட்டிற்காக விளக்குகளைப் பயன்படுத்தி வந்ததை அறிய முடிகிறது.

துணை நூல்கள்

1. மா.சந்திரமூர்த்தி, இராசராச சோழன் வரலாற்றுக் கூடம்.
2. திருக்குடமுழுக்குப் பெரு விழா மலர், திருவாரூர்
3. அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோவில்
4. வித்துவான் ச. தண்டபாணி தேசிகர், திருவாரூர் தல வரலாறு.

*காப்பாட்சியர், அரசு அருங்காட்சியம்,
திருவாரூர்.

கோடங்கிப்பட்டி முத்தானம்மன் கோயில் ஓவியங்கள்

*ப. காசிலிங்கம்**

கோடங்கிப்பட்டி கரூர் வட்டத்திலுள்ள ஒரு சிற்றூர். இது கரூர் பேருந்து நிலையத்திலிருந்து 6 கீ.மீ தூரத்தில் உள்ளது. இக் கிராமத்தில் தொட்டியநாயக்கர்கள் அதிகம் வசித்து வருகின்றனர். இவர்கள் பின்னிரவு நேரங்களில் வீட்டுக்கு வீடு சென்று குறி சொல்வார்கள். பின்னர் காலையில் தாம் கூறியவற்றிற்காக ஒவ்வொரு வீட்டிலும் துணிமணி, பணம், அரிசி, இவற்றை தானமாகப் பெற்றுச் செல்வர். சில சமயங்களில் வேட்டையாடவும் செல்வர். வேட்டைக்குச் செல்லும் பொழுது நாய்களை அழைத்துச் செல்வர். நாய்களை ஏவி விட்டுத் தாம் கொண்டு செல்லும் கம்பினால் மிருகங்களை அடித்துக் கொண்டு வருவர்.

கோடங்கிப்பட்டியில் அமைந்துள்ள ஒரு சிறிய கோயில்தான் முத்தானம்மன் கோயிலாகும். கோயில் சுமார் அரை ஏக்கர் சுற்றளவு கொண்டதாக மதில் சுவருடன் உள்ளது. கோயிலின் முன் பக்கம் 4 தூண்களைக் கொண்ட சிறு கொடிக் கம்பம் உள்ளது. கோயில் நுழைவு வாயில் வடக்குப் பக்கமாக அமைந்துள்ளது.

கோயில் அமைப்பு

கருவறையில் சிலை ஏதும் வைக்கப்படவில்லை. சித்திரை மாதத்தில் பண்டிகை நடைபெறும் சமயத்தில் களிமண்ணால் சிலை (அம்மன்) செய்து, பண்டிகை முடிந்தவுடன் தர்மகர்த்தா வீட்டுக்கு எடுத்துச் சென்று விடுவர் என ஊர் மக்கள் கூறுகின்றனர். சுற்று வட்டாரத்திலுள்ள 18 பட்டிக்கும் பெரிய விழாவாக இது இருக்கும் எனக் கூறுகின்றனர். கருவறையின் கதவின் ஒரு பக்கம் மரச்சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. கருவறையின் முன் பக்கத்தில் கஜலட்சுமியின் புடைப்புச் சிற்பமும் அதற்கு மேல் நடனமாடும் காட்சியும் உள்ளன.

மகாமண்டபம்

கோயிலின் மகாமண்டபம் 16 தூண்களைக் கொண்டதாக உள்ளது. தூணின் ஒவ்வொரு பக்கத்திலும் காணப்படும் புடைப்புச் சிற்பங்கள் தட்சிணாமூர்த்தி, முருகன், சுப்ரமணியர், சிவன்,

பிட்டுக்கு மண் சுமந்த சிற்பம், முனிவர், கிளி, ஆமை, சூரியன், சந்திரன், சூரங்கு, நட்சத்திரம், மீன்கள், சங்கு ஊதும் மனிதர் போன்றவைகளாகும்.

முன் மண்டபம்

முன் மண்டபம் 6 தூண்களைக் கொண்டதாக அமைந்துள்ளது. இதில் ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. வண்ணங்கள் மிகவும் நேர்த்தியாக உள்ளன. சுண்ணாம்பு அடிக்கப் பட்டுள்ளதால் பாதி உருவங்கள் மறைந்துள்ளன. நாயக்க மன்னர்கள்



காலத்தில் ஓவியங்கள் வரையப் பட்டுள்ளன. இதன் காலம் கி.பி. 18ஆம் நூற்றாண்டாக இருக்கலாம் எனக் கருதலாம்.

மண்டபத்தின் நான்கு பக்கங்களும் ஓவியங்கள் உள்ளன.

கிழக்குப் பக்கமுள்ள ஓவியங்கள் (பின் வரிசை)

1. விஷ்ணுவின் 10 அவதாரங்கள் வரையப்பட்டுள்ளன. (கூர்ம அவதாரம், மச்ச அவதாரம், பலராமன் போன்றவை) அதற்கடுத்து கண்ணன் குழந்தை பருவத்திலுள்ள ஓவியம் உள்ளது.
2. ஆண், பெண்கள் வழிபாடு செய்வது போன்று வரையப்பட்டுள்ளது.
3. சிவன் பிட்டுக்கு மண் சுமந்த ஓவியம் வரையப்பட்டுள்ளது.
4. குதிரை மீது அரசியும் பக்கத்தில் மந்திரியும் (அ) வீரன் குடை பிடிப்பதும் சிவன் பிட்டுக்கு மண் சுமப்பது போன்றும் பின் தொடர்ந்து ஆட்களின் உருவங்களும் வரையப்பட்டுள்ளன.

கிழக்கு பக்கமுள்ள ஓவியங்கள் (முன் வரிசை)

1. ஸ்ரீரங்க நாதர் பள்ளி கொண்ட காட்சியும் பக்கத்தில் பெண்கள் உருவங்களும் வரையப்பட்டுள்ளன.
2. கண்ணனுடைய குழந்தைப் பருவம் பக்கத்தில் பெண்கள் நிற்கும் காட்சியுடன் வரையப்பட்டுள்ளது.

3. காளை மீது (சிவன், பார்வதி) உருவங்கள் பக்தர்கள் வணங்குவது போன்று வரையப்பட்டுள்ளது.
4. சுப்ரமணியர் வள்ளி தெய்வானையுடன் காட்சி தரும் ஓவியத்தில் ஒரு பக்கம் நாரதரும் இன்னொரு பக்கத்தில் முனிவரும் உள்ளனர்.
5. சிவலிங்கம் வரையப்பட்டுள்ளது.

மேற்கு பக்கத்திலுள்ள ஓவியங்கள் (முன் வரிசை)

1. தனி மனிதனின் ஓவியம்
2. கண்ணன் பெண்களுடன் இருக்கும் காட்சி
3. கண்ணன் பூவிதழில் வரையப்பட்டுள்ளான் பெண்கள் நடனமாடும் காட்சியும் வரையப்பட்டுள்ளது.
4. ராதை, மான், சிங்கம் இயற்கைக் காட்சிகள் வரையப்பட்டுள்ளன.

மேற்கு பக்கத்திலுள்ள ஓவியங்கள் (பின் வரிசை)

1. கண்ணப்ப நாயனார் சிவனுக்கு கண்ணைக் கொடுக்கும் காட்சி வரையப்பட்டுள்ளது.
2. உமையொரு பாகன் (அர்த்தநாரீஸ்வரர்) வணங்கும் காட்சி
3. பிட்சாடனார் உருவம் வரையப்பட்டுள்ளது.
4. மார்க்கண்டேயனை பாசக்கயிறு கொண்டு எமதர்மன் இழுக்கும் காட்சி அருகில் சித்திர குப்தன் இருக்கிறார்.

தெற்கு பக்கமுள்ள ஓவியம்

1. கஜலட்சுமியின் உருவம் மற்றும் பெண்கள் சாமரம் வீசும் காட்சி வரையப்பட்டுள்ளன.

இவ்வாறு வரையப்பட்டுள்ள ஓவியங்கள் நாம் பாதுகாத்து நம்முடைய வருங்கால சந்ததியினர் தெரிந்து கொள்ளும் வகையில் செய்திடல் வேண்டும். இந்திய நாட்டின் கலை, பண்பாட்டை இது போன்ற கோயில்களில் பாதுகாப்பது மிக மிக அவசியமாகும்.

**காப்பாட்சியர், அரசு அருங்காட்சியகம்,*
கரூர்– 639002.

வீரன் ஊமைத்துரை நினைவுச் சிறையினை அலங்கரிக்கும் ஓர் அருங்காட்சியகம்

*திருமதி. சே.கிருஷ்ணம்மாள்**

திருநெல்வேலி அருங்காட்சியகம் 1993 இல் திருவனந்தபுரம் செல்லும் முதன்மை சாலையில் ஒரு தனியார் கட்டிடத்தில் ஆரம்பிக்கப்பட்டது. எனினும், வாடகை செலுத்துவதை தவிர்த்திடவும் அருங்காட்சியகத்தை விரிவுபடுத்திடவும் ஆணையரின் அறிவுரையின் பேரில் அரசு கட்டிடத்தில் மாற்றுவதற்கு காப்பாட்சியர் தீவிரமாக முயற்சித்து இறுதியில் தென்னிந்தியாவின் ஆக்ஸ்போர்டு என அழைக்கப்படும் பாளையங்கோட்டையில் வெள்ளையர் ஆட்சியை எதிர்த்த மாவீரன் வீரபாண்டிய கட்டபொம்மனின் தம்பி ஊமைத்துரையைச் சிறை வைத்த வரலாற்றுச் சிறப்பைப் பெற்ற கட்டிடத்தினைத் தேர்வு செய்து, அக் கட்டிடத்திற்குப் பொறுப்பு வகித்த வருவாய் துறை ஆணையரிடமிருந்து பெறுவதற்கு அருங்காட்சியக ஆணையர் மற்றும் அப்போதைய தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாட்டுத் துறை அமைச்சர் முனைவர். மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் ஆகியோரின் பெரும் முயற்சியால் அருங்காட்சியகத்திற்கு ஒதுக்கப்பட்டு, பொதுப்பணித்துறையினர் மூலம் சீரமைக்கப்பட்டு, 1.4.2000 முதல் மேற்கண்ட ஊமைத்துரையின் நினைவுச் சிறையில் அருங்காட்சியகம் செயல்பட்டு வருகிறது. இக் கட்டிடம் மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளர் அலுவலகம், தூய யோவான் கல்லூரிக்கு அருகில் நகரின் மைய பகுதியில் கம்பீரமாக அமைந்துள்ளது. இக்கட்டிடத்தின் வரலாற்றுப் பின்னணியை இக் கட்டுரையின் மூலம் காண்போம்.

கெட்டி பொம்மு வழித்தோன்றல்

ஆந்திராவின் பல்லாரி மாவட்டத்தில் வாடிக்கோட்டை என்னும் ஊரில் பால்ராஜ் என்னும் சிற்றரசனுக்கு 8ஆம் மகனாகப் பிறந்தார் பொம்மு என்பவர். இவர் தான் கட்டபொம்மன், ஊமைத்துரை வம்சாவழியினர் வேரூன்றச் செய்த முன்னோடியானவர். தமிழ்நாட்டில் பஞ்சம் பிழைக்க வந்த பொம்மு வம்சத்தினர் மணியாச்சிக்கு அருகில் உள்ள சாலிக்குளம் என்னும் பறம்பில் வந்து குடியேறி வாழலாயினர். அது சமயம் அவ்விடம் வந்த

கள்ளர்களை தனித்து நின்று எதிர்த்து நின்றவர் இந்த பொமமு. கூட்டபொம்மன் தோகலவார் என்னும் பிரிவைச் சார்ந்தவர். தோகலவார் என்றால் பசு மந்தைகளை உடையவர் என்று பொருள். இவர்கள் தங்கள் குல தெய்வம் தேவி சக்கம்மாள் அருளால் குறி சொல்லியும் வந்தனர்.

ஆட்சி பெற்ற வரலாறு

பஞ்ச பாண்டியனின் வழி வந்த ஜெகவீரபாண்டியன் என்பவர் அழகிய வீரபாண்டியபுரத்தை (இன்றைய ஒட்டப்பிடாரம்) ஆட்சி செய்து வந்தார். இவரிடம் ஆதி கட்டபொம்மு திசைக்காவலராக பணியாற்றினார். இவர் தம்முடைய சிறப்புமிகு செயலால் அரச குடும்பத்தின் நம்பிக்கையைப் பெற்றார். மன்னர் ஜெகவீரபாண்டியனுக்கு வேறு சந்ததி இல்லாததால், கட்டபொம்மு ஆட்சிப் பொறுப்பேற்றார். மன்னரின் நிலைவாகப் பாண்டியன் என்ற பெயரை தன் பெயரோடு இணைத்துக் கொண்டார்.

வீரபாண்டிய கட்டமொம்மன்

பாஞ்சாலங்குறிச்சியை 1760 இல் ஆட்சி புரிந்த ஜெகவீரபாண்டிய கட்டபொம்முவின் மூத்த புதல்வர்தான் வீரபாண்டிய கட்டபொம்மன். தாயார் ஆறுமுகத்தம்மாள். இவருக்கு ஊமைத்துரை, துரை சிங்கம் என்று இரு சகோதரர்களும் ஈசுவர வடிவு, துரைக்கண்ணு என்ற இரு சகோதரிகளும் உண்டு. வீரபாண்டிய கட்டபொம்மன் பாஞ்சாலக்குறிச்சி பாளையத்தை சார்ந்த 96 கிராமங்களையும் 6 வணிகங்களாகப் பிரித்து, நீதி வழுவாது, நெறியுடன் ஆட்சி புரிந்தார். வியாபாரம் செய்ய வந்த ஆங்கிலேயர்கள் தங்களது பண வலிமையாலும் அறிவுத் திறமையாலும் சூழ்ச்சியாலும் இந்தியாவில் பல சிற்றரசுகளை ஆக்கிரமித்து வரி வசூல் செய்து வந்தனர். அது சமயம் கட்டபொம்மனையும் ஆங்கிலேயர்கள் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் அடங்கி நடக்க வேண்டும் எனவும் வரி செலுத்த வேண்டுமெனவும் நிர்பந்தம் செய்தனர். வெள்ளையர் ஆட்சியை முதன் முதலில் எதிர்த்த மாவீரன் வீரபாண்டிய கட்டபொம்மன் அவர்களுக்கு வரி செலுத்த மறுத்து, ஏனைய சிற்றரசுகளுடன் கூட்டணி அமைத்து எதிர்த்து ஆரம்பத்தில் வெற்றி கண்டாலும், ஆங்கிலேயரின் பீரங்கி போன்ற அதிநவீன ஆயுதங்களாலும் எட்டப்பன் போன்ற வஞ்சக நபர்களாலும் ஆங்கிலேயர்களிடம் போரில் தோல்வியுற்று அவர்களின் போர்

கைதியாகி கயத்தாறு என்னும் இடத்தில் 16.10.1779 அன்று தூக்கிலிடப்பட்டார். போரில் பாஞ்சாலக்குறிச்சி கூட்டமொம்மன் கோட்டை தரை மட்டமானது. அவரது தம்பிகளான ஊமைத்துரை, துரைசிங்கம் ஆகியோர் கைது செய்யப்பட்டு, பாளையங்கோட்டைச் சிறையில் அடைக்கப்பட்டனர்.

ஊமைத்துரை

வீரபாண்டிய கட்டபொம்மனின் மூத்த தம்பி ஊமைத்துரை ஆவார். இளைய தம்பி துரை சிங்கம் ஆவார். ஊமைத்துரையின் மனைவியின் பெயர் சௌந்தரவடிவு. ஊமைத்துரை திக்கி, திக்கிப் பேசும் திக்குவாய்காரராக இருந்தபடியால் ஊமைத்துரை என்ற பெயர் பெற்றார். கட்டபொம்மனைத் தூக்கிலிட்ட பின் கைது செய்யப்பட்ட ஊமைத்துரை மற்றும் உறவினர், நண்பர்கள் மொத்தம் 16 பேர்களை ஆங்கிலேயர்கள் கைது செய்து பாளையங்கோட்டைச் சிறையில் அடைத்தனர். அவர்களது கை, கால்களுக்கு விலங்கிட்டு விலங்குகள் போல் நடத்தப்பட்டுப் பல்வேறு கொடுமைகளுக்கும் ஆளாகினர். ஊமைத்துரை தம்மையும் தம்மோடு இருந்தவர்களையும் ஆங்கிலேயர் விரைவில் விடுதலை செய்வர் என எதிர்பார்த்தார். ஆனால், ஆங்கிலேயர்கள் மற்றவர்களுக்கு இது எச்சரிக்கையாக அமையட்டும் என்று விடுதலை செய்யாமல் இருந்து விட்டனர். 16 மாதங்கள் உருண்டோடின.

சிறைக் கதவைத் தகர்த்தல்

ஊமைத்துரை பொறுமையிழந்து, சிறையைத் தகர்த்துப் பறங்கியர் தலைகளை உருட்ட எண்ணியபோது அவரோடு இருந்த அவரது மாமனார் ஊமைத்துரையை நோக்கி நெருப்பாற்றை கடக்க நினைக்கிறீர்கள். கடும் புயலைக் கைக்குட்டையால் தடுக்க நினைக்கிறீர்கள். தற்போது அது இயலாத காரியம். ஏனெனில், ஆங்கிலேயரின் ஆட்சி இந்தியத் திருநாடு முழுவதும் படைபலம் பெற்றுப் பரவி இருக்கிறது. எனினும், அவர்களை கண்டு அஞ்சவோ, தஞ்சமடையவோ வேண்டாம். பொறுமையோடு இருந்து உரிய காலம் கனிந்து வரும்போது கயவர்களைத் தாக்குவோம். வெற்றி மாலை சூடி, விடுதலைப் பண் பாடுவோம் என்று கூறிச் சிறையை உடைப்பதைத் தற்காலிகமாக நிறுத்தி ஊமைத்துரையை அமைதியடையச் செய்தார்.

ஆனால், 16 மாதங்களாக ஊமைத்துரையும் மற்றவர்களும் விடுதலையாகாததைக் கண்டு, பாஞ்சாலக்குறிச்சியில் உள்ள அவர்களது நண்பர்களும் உறவினர்களும் மனக் கொதிப்படைந்து அவர்களை விடுவிப்பதற்காக மூன்று முறை ரகசியக் கூட்டங்கள் நடத்தி, முடிவில் சிவத்தையா என்பவர் தலைமையில் திடீர் தாக்குதல் நடத்தி ஊமைத்துரையையும் மற்றவர்களையும் விடுதலை செய்ய வேண்டும் எனத் தீர்மானித்தனர்.

அதன்படி குறிப்பிட்ட இரவில் வாள் வீசுவதில், வேல் எறிவதில், விற்போர் புரிவதில், மற்போர் செய்வதில், சிலம்பம் வீசுவதில் கைதேர்ந்த வீரர்கள் 337 பேர் சிவத்தையா தலைமையில் பாயைங்கோட்டை அருகில் உள்ள வல்லநாட்டு மலையருகில் கூடினார்கள். அவர்களுக்கு தலைமை வகித்த சிவத்தையா, நீங்கள் பல்வேறு வேடங்கள் புரிந்து பகல் முழுவதும் பாளையங்கோட்டையில் தனித் தனியாகத் திரிந்து கொண்டு இருக்க வேண்டும். மாலையில் சூரியன் மறைவதற்கு முன்னால் ஊமைத்துரை அடைக்கப்பட்டு இருக்கும் சிறைச்சாலை அருகில் ஆயுதங்களுடன் வந்து தாமதம் செய்யாமல் கூடிட வேண்டும். நான் சைகை செய்வேன். நீங்கள் தாமதம் செய்யாமல் திடீர் தாக்குதல் நடத்திச் சிறைக் கதவை உடைத்து, ஊமைத்துரை மற்றும் அனைவரது கை கால்களில் உள்ள விலங்கினை உடைத்தெறிந்து விடுவிக்க வேண்டும். பின்னர், நாம் ஊமைத்துரை தலைமையில் பாஞ்சாலங்குறிச்சி நோக்கிச் செல்ல வேண்டும் என அறிவுரை கூறினார்.

அதன்படி வீரர்கள் அனைவரும் இரவோடு இரவாக பயணம் செய்து விடியற்காலையில் பாளையங்கோட்டை வந்தடைந்தார்கள். அவர்களில் ஒரு சிலர் விறகு கட்டுகளுக்குள் ஆயுதங்களை மறைத்து வைத்து விறகு வெட்டிகளாகவும் ஒரு சிலர் புல் கட்டுகளுக்குள் ஆயுதங்களை வைத்து புல் கட்டுகள் விற்பவர்கள் போலவும் ஆடைகளுக்குள் ஆயுதங்களை மறைத்து வைத்து பிச்சைக்காரர்கள் போலவும் ஒரு சிலர் வணிகர்களாகவும் பல்வேறு வேடங்கள் அணிந்து பாளையங்கோட்டைத் தெருக்களில் சுற்றித் திரிந்து, ஏற்கனவே திட்டமிட்டபடி அனைவரும் மாலை 6 மணி அளவில் ஊமைத்துரையும் மற்றவர்களும் அடைக்கப்பட்டிருந்த சிறைச்சாலை அருகில் வந்து சேர்ந்தனர். தலைவர் சிவந்தையாவிடமிருந்து சமிக்ஞை மூலம் ஆணை கிடைத்தது.

அடுத்த கணமே, சிறைசாலையைக் காவல் காத்து வந்த மொத்த 48 பேரையும் அதிரடியாக அடித்து வீழ்த்தினார்கள். சிலர் இறந்தனர், சிலர் தப்பித்து 11/2 கீலோமீட்டர் தொலைவில் முகாமிட்டிருந்த மேஜர் மெக்காலேயிடம் போய் விவரத்தை எடுத்து உரைத்தனர். இதற்கிடையில் சிறைக்குள் புகுந்து கதவுகளை உடைத்து ஊமைத்துரை மற்றும் உள்ளவர்களிடம் இருந்து கை, கால்களில் இடப்பட்டிருந்த விலங்குகளை உடைத்து ஊமைத்துரையை 2.2.1801 அன்று விடுவித்தனர். ஊமைத்துரை தான் விடுதலையானதை நினைத்து மகிழ்ந்தாலும் தாமாகவே சிறைக்கதவுகளை உடைத்து வெளியேற முடியாமல் போனதற்கு சிறிது வருந்தவே செய்தார். மேலும், சிறையில் இருந்து தப்பிச் சென்ற ஊமைத்துரை பாஞ்சாலக்குறிச்சிக்கு சென்று தரைமட்டமான கோட்டையை 7,000 பேர் கொண்ட மக்கள் உதவியுடன் ஐந்தே நாள் இரவு பகலில் வரகுமி, கம்புச் சக்கை, பதனீர், வைக்கோல் மற்றும் மண் கொண்டு அழகிய புதிய கோட்டை ஒன்று உருவாக்கினான். மன்னராக பதவியேற்றுக் கொண்டான்.

வீரன் ஊமைத்துரையுடன் சிறையிலிருந்த அவரது உறவினர் மற்றும் நண்பர்கள் பெயர் பட்டியல்.

1. துரைசிங்கம் (ஊமைத்துரை தம்பி)	6. முத்துகுமாரசாமி	11. சின்னமல்லு
2. குமாரசாமி	7. வீர சிண்ணு	12. ரணசிங்கு
3. முத்தையா	8. வீர ராமுலு	13. வீரமொம்மு
4. துரைராஜா	9. விஜயராகவன்	14. ஜெயராமு
5. ராஜமொம்மு	10. கொடிவெட்டுர் நாச்சியார்	15. இராம தளவாய்

துணை நூல்கள்

1. கலியபெருமாள் தி.சு., ஊமைத்துரை
2. மாணிக்கம் வே., வீரபாண்டியன் கட்டபொம்மன் வரலாறு

*காப்பாட்சியர்(பொறுப்பு), அரசு அருங்காட்சியகம், திருநெல்வேலி

நாயக்கர் கால நாணயங்கள் (1529–1736)

*க. செளந்திரபாண்டியன்**

நாணயங்கள் நாட்டின் பொருளாதார வளர்ச்சியினைக் காட்டும் ஓர் அளவு கோலாக விளங்குகிறது. நாணயங்களை மன்னர்கள் தம் வெற்றியின் போதும் பதவியேற்கும் போதும் இன்ன பிற முக்கிய நிகழ்ச்சிகளின் போதும் வெளியிட்டனர். ஒவ்வொரு பேரரசுக் காலத்திலும் வெவ்வேறு வகையான நாணயங்கள் வெளியிடப்பட்டன.

நாயக்கர்கள் விஜயநகரப் பேரரசின் காலத்திற்குப் பின் அரியணை ஏறியவர்கள். கிருஷ்ண தேவராயர் காலத்தில் நியமிக்கப்பட்ட பாளையக்காரர்கள் தன்னுரிமை பெற்று ஆட்சிக் கட்டிலில் அமர்ந்தனர். அவர்கள் வெளியிட்ட நாணயங்களைப் பற்றிய ஆய்வினை இங்கு காண்போம்.

நாயக்கர் காலத்தில் நாணயங்கள் பெரும்பாலும் செப்பில் வெளியிட்பட்டன. தங்கம், வெள்ளி போன்ற உலோகங்களில் நாணயங்கள் குறைவாகவே வெளியிடப்பட்டுள்ளன.

விசுவநாத நாயக்கர் நாணயங்கள்

இவர் காசின் முன்பக்கம் நிற்கும் மனித உருவமும் பின்பக்கம் இருகயல், இடையில் சாட்டை, பிறைச் சந்திரன் மற்றும் இடப்பக்கமிருந்து வலப்பக்கமாகத் தமிழில் விசுவநாதன் என்று எழுதப் பெற்று காணப்படுகின்றது,

தமிழகத்தில் சிறுவடிவிலான சில செப்புக் காசுகள் பெரும் அளவில் கிடைத்து வருகின்றன. இவற்றில் ஒரெழுத்து அல்லது ஈரெழுத்துக்களே காணப்படுகின்றன. இவ்வெழுத்துக்களைக் கொண்டு மதுரை நாயக்கர் மன்னர் சிலரால் வெளியிடப்பட்டிருக்கலாம் என்ற கருத்து கொள்ளப்படுகின்றது.

'வீ' என்ற நாகரி எழுத்தில் ஒருவகையும் தெலுங்கு கன்னடத்தில் மற்றொரு வகையும் எழுதப் பெற்றிருக்கும். காசு வீரப்ப நாயக்கரையும் 'சொ' என்ற தெலுங்கு, கன்னட எழுத்தில் எழுதப் பெற்று காணப்படுவது சொக்கநாத நாயக்கரால் வெளியிடப்பட்டது என்றும் 'தி' என்ற எழுதப்பட்டிருப்பது திருமலை நாயக்கரால் வெளியிடப்பட்டிருக்கலாம் என்றும் ஊகிக்கப்படுகிறது.

மதுரையை ஆண்ட நாயக்க மன்னர்கள் பாண்டியர்களைக் காட்டிலும் மிகச் சிறிய வடிவில் செப்புக் காகங்களை வெளியிட்டுள்ளனர். அவற்றில் வீ, சொ, தி போன்ற தங்களது பெயரின் முதல் எழுத்தினையும் காளை, கந்தன், சந்திரன், சூரியன், கத்தி, விநாயகர், சங்கு, தேவி முதலிய உருவங்களையும் பொறித்து வெளியிட்டுள்ளனர்.

இவற்றில் திருமலை நாயக்கர் வெளியிட்டது என்று கருதப்படும் காசின் ஒரு புறம் கத்திக்கு முன்பாக நிற்கும் காளையின் உருவமும் மதியின் உருவமும் காணப்படுகின்றன. மற்றொரு புறம் நிற்கும் நிலையிலுள்ள உருவம் ஒன்று காணப்படுகிறது. இவ் வுருவத்திற்கு அருகில் 'தி' என்று தெலுங்கில் எழுதப்பட்டுள்ளது. இதே போன்று 'தி' என்ற தெலுங்கு எழுத்து ஒருபுறம், மற்றொரு புறம் மீனாட்சியின் உருவமும் பொறிக்கப்பட்டுள்ளன. செப்புக் காகங்கள் மதுரையில் நிறையக் கிடைத்துள்ளன.

இராணி மங்கம்மாவின் நாணயத்தின் முன் பக்கத்தில் மேடைமீது படுத்திருக்கும் காளை உருவமும், பின் பக்கம் நான்கு சதுரங்களில் 'மங்கம்மா' என்ற தெலுங்கு எழுதப் பெற்றுள்ளது. இது மதுரையை ஆட்சி புரிந்த இராணி மங்கம்மாவால் வெளியிடப்பட்டது என்று தெரிய வருகிறது.

இரண்டு செப்புக் காசுகள் கிடைத்துள்ளன. முதல் வகைக் காசில் சரஸ்வதி வீணையுடன் அமர்ந்திருக்கும் காட்சி அழகாக உள்ளது. பின் பக்கத்தில் மங்கம்மா என்றும் கி.பி.17ஆம் நூற்றாண்டு தெலுங்கு எழுத்து உள்ளது. காசின் எடை 2.1 கிராம்.

இரண்டாம் வகைக் காசின் முன் பக்கத்தில் அன்னப் பறவையின் பின்னால் சரஸ்வதி வீனணயுடன் இருக்கும் காட்சி அழகாக உள்ளது. காசின் பின் பக்கத்தில் மங்கம்மா என்று கி.பி.17ஆம் நூற்றாண்டு தெலுங்கு எழுத்து உள்ளது. இதன் எடை 1.8 கிராம் மதுரை நாயக்கர்கள் தெலுங்கையே இவற்றில் பொறித்து வெளியிட்டுளனர்.

செஞ்சிப் பகுதியை ஆட்சி புரிந்த நாயக்க மன்னர் கிருஷ்ணப்ப நாயக்கர் (கி.பி. 1567–1575) இவர் வெளியிட்ட நாணயங்கள் கிருஷ்ணப்ப நாயக்கர் என்று நான்கு வரியில் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. இக் காசின் முக்கியத்துவம் யாதெனில் நாயக்கர் என்று தம் குலப் பெயரையும் எழுதி

வெளியிடப்பட்டதாகும். தஞ்சைப் பகுதியை ஆண்ட நாயக்கர் அச்சுத தேவராயரின் நாணயத்தின் முன் பக்கம் புள்ளிகளான வட்டத்தின் சங்கின் உருவமும் பின் பக்கம் இரு வரிகளில் நாகரி எழுத்தில் சவப்பா என்று எழுதப்பட்டும் காணப்படுகிறது.

இரகுநாத நாயக்கர் (கி.பி. 1600–1634)

இரகுநாத நாயக்கர் செப்புக் காசுகளை வெளியிட்டார். மன்னரின் பெயர் நாகரி எழுத்தில் 'ரகுநாத' என்று இரு வரிகளில் எழுதப்பட்டு உள்ளது. மற்றொரு காசில் விசைய ரகுநாதன் எனத் தமிழ் மொழியில் பொறிக்கப்பட்டுள்ளது. காசின் முன் பக்கத்தின் இராமர் இலக்குவன், சீதை, ஹனுமன் நிற்கும் நிலையிலும் பின்பக்கம் தம் இடையில் நீண்ட வாளினைச் செருகிக் கொண்டு நிற்கும் உருவத்தினையும் பொறித்து வெளியிட்டுள்ளார்.

தஞ்சை செவப்ப நாயக்கர் மற்றும் ரகுநாதர் காலத்து நாணயங்களில் சங்கு உருவம் பொறிக்கப்பட்டுள்ளன.

கர்நாடகத்தில் சதாசிவ நாயக்கர் சிவன்–பார்வதி உருவத்தில் அழகிய தங்க நாணயங்களை வெளியிட்டார். சிவன் திரிசூலத்துடன் வேகமாகப் பாயும் மானை ஏந்தியபடி காணப்படுகிறது.

பாண்டிய நாட்டின் சின்னமான மீன் உருவம் பொறிக்கப்பட்ட சில வகை நாணயங்களை மதுரை நாயக்கர்கள் வெளியிட்டார்கள். ஆரம்ப கால நாயக்கர்கள் மன்னர் உருவத்தினையும் நந்தி உருவத்தினையும் பொறித்து வெளியிட்டனர். மதுரை நாயக்கர்களின் கடைசி மன்னரான சொக்கநாதர் மிருக உருவங்கள், ஹனுமான் உருவம் பொறித்த நாணயங்களை வெளியிட்டார்.

மேற்கோள் நூல்கள்

1. வேதாசலம் வெ., மற்றும் போசு சொ., (1995) திருமலை மன்னர் கையேடு, தமிழ்நாடு தொல் பொருள் ஆய்வுத்துறை, சென்னை–113.
2. Sathiyanatha Aiyar R., History of Madurai Nayaks
3. பரந்தாமனார் அ.கி., (1960) மதுரை நாயக்கர் வரலாறு, அல்லி நிலையம், சென்னை
4. Nelson J.H., (1868) The Madura Country .

*காப்பாட்சியர், அரசு அருங்காட்சியகம்,
உதகமண்டலம் – 643 001.*

Museum Theatre